

ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14

Registered as a News paper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 9 [14-12-67] இதழ் 305
யாழ்ப்பாணம்பிலவங்க கார்த்திகை 28 ரம்ழான் 10 வியாழக்கிழமை



ராஜ பீடி கம்பெனி; கொழும்பு-14

# பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எம். ஜி. ஆர். உதவி

## ரூ. 10,000 வழங்கினர்

நமது சென்னை நிருபர்

சென்னை, டிச. 13

பம்பாய். மைசூர், ஹைதரபாத் ஆகிய இடங்களில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பறங்கிமலை தொகுதி அங்கத்தவரும், சினிமா நடிகருமான திரு. எம். ஜி. ராமச்சந்திரன் உடனடியாக பத்தாயிரம் ரூபா வழங்கினர்.

பூமியதிர்ச்சிபற்றி திரு. எம். ஜி. ராமச்சந்திரன் கூறியதாவது:

அண்மையில் நடந்த தீ விபத்து, வெள்ளம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் அதிலிருந்து முற்ருக நிவிர்த்திபெறுமுன்னரே இப்பூமியதிர்ச்சி சம்பவத்தை கேட்டு அதிர்ச்சியடைந்துள்ளனர். பம்பாயிலும் மற்றும் பகுதிகளிலும் ஏற்பட்ட பூமியதிர்ச்சியால், மக்கள் அடைந்துள்ள துன்பத்தையிட்டு தமிழ்நாட்டு மக்கள், பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

உலகில்வாழும் மக்கள் எல்லாரும். மகிழ்ச்சியாக வாழ வேண்டுமென்றுதான். தமிழர்கள் எப்பொழுதும் விரும்புகிருர்களென்றும் அவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் சென்னையில், பல இடங்களில் இலேசாக பூமியதிர்ச்சி ஏற்பட்டது. இதனல் எவ்வித சேதமும் ஏற்படவில்லை. உயிர்ச்சேதமும்நிகழவில்லை.

## வலி. மேற்கில் மட்டும் 32,000 மக்கள்பாதிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

வெள்ளத்திஞல் வீடிழந்தவர்களின் புள்ளிவிபரங்களை சேகரிப்பதில் கிராம சேவகர்கள் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றனர். இவர்களுக்கு உதவியாக சிரேஷ்ட உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட விருக்கிறுர்கள்.

ஒவ்வொரு பிரிவிலும் காரியாதிகாரிகள் வெள்ள அகதிகள் பற்றிய விபரங்களை தயாரித்துவருகின்றனர்.

வலிகாமம் மேற்கு பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களின் புள்ளிவிபரங்கள் தயாரிக்கப்பட்டு நேற்று அரசாங்க அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

வலிகாமம்மேற்கில் சுமார் 32,000 மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், இவர்களுக்கு இலவச மா, வழங்கப்பட்டிருப்பதாகவும், தெரியவருகிறது. சுமார் 2000 குடும்பங்கள் வலிகாமம் மேற்கில் வீடிழந்திருப்பதாகவும் தெரியவருகிறது.

மற்றும் பகுதிகளிலுள்ள காரியாதிகாரிகளும், விபரங்களை, தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

## வீதிகளின் குண்டு, குழிகள் நிரப்பப்படுகின்றன

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணத்தில் பெரு மழை காரணமாக அரிக்கப்பட்டிருந்த வீதிகளுக்கு கற்கள் நிரப்பி செப்பனிடும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

வீதிகள் பழுதடைந்ததால் சில பகுதிகளில் வாகனப் போக்குவரத்து முற்ருகத் தடைப்பட்டிருந்தது. டயர்கள் பழுதடைந்துவிடுமென்ற காரணத்திஞல்வாகனங்கள் எதுவும் அவ்வீதியிஞல் செலுத்தப்படாமலிருந்தன.

நேற்றுயாழ்ப்பாண நகர வீதிகள் செப்பனிடப்பட்டுவிட்டதும் வாகனப்போக்குவரத்து வழமைபோல் நடைபெற்றது.

வெள்ளநீரைப் பாய்ச்சுவதற்காக பல இடங்களில் வீதிகளின் நடுவில் ஆழமாக வெட்டப்பட்டன. தற்பொழுது அவ்வீதிகளும் செப்பனிடப்படுகின்றன.

வெள்ளத்திஞல் உடைந்த வாய்க்கால், மதகுகளை திருத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்படாததால், அவ்விடங்களில் தொடர்ந்து போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

## 'தோட்டத் தொழிலாளர் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும்'

நாவலப்பிட்டி, புதன்

''தோட்டத் தொழிலாளரின் சம்பளத்தில் 52 ரூபா 50 சதம் அதிகரிக்கப்பட வேண்டும். விலைவாசி உயர்வு, ரூபா பெறுமதி குறைப்பு ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு இந்த சம்பள உயர்வு அளிக்கப்படவேண்டும்.''

தொழிலாளர் தேசிய சங்க அரசியல், சமூக, பொருளாதாரக் காரியதரிசி திரு. வி. கே. வெள்ளையன் விடுத்திருக்கும்அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

'ஆகக்குறைந்த சம்பளம் பெறும் தோட்டத் தொழிலாளர்களே நாணய மதிப்புக் குறைப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அரசாங்கம் தொழிலாளர்களின் சம்பளத்தை முதலில் உயர்த்த வேண்டும் என்றும், தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் உயர்த்தப்படாமல்அவர்கள்ஏமாற்றப்பட்டுள்ளார்கள். கடைசியாக சம்பளஉயர்வு என்ற பெயரில் 10 சதம் மட்டும் உயர்த்தப்பட்டது. பஞ்சப்படி 17-50 மறுக்கப்பட்டது'' என்றும் அந்த அறிக்கையில் அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

''அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு அளித்ததுபோல்தோட்டத்தொழிலாளரின் சம்பளமும் உயர்த்தப்படவேண்டும். நியாயமான இக்கோரிக்கையை நிறைவேற்றி தனியார் துறைக்கு இந்தவிஷயத்தில் வழிகாட்டவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என்றும் அவர் கேட்டுக் கொண்டிருக்கிருர்.

## 29ந்திகதி தேர்தல்

யாழ்ப்பாணம், புதன்

கிளிநொச்சிபட்டினசபைத் தேர்தல் இம்மாதம் 29ந் திகதி நடைபெறவிருக்கிறது. அண்மையில் புதிதாக உருவாக்கப்பட்ட இப்பட்டினசபையின்முதல்தேர்தல் இதுவாகும்.

## தொழிற் தகராறுக்கு 10 வருடகால உடன்படிக்கை அண்ணு யோசனை

சென்னை, டிசெ. 13

முதலாளிகள், தொழிலாளர்களுக்கிடையேயான தகராறுகளைப் பத்து வருடகாலத்துக்குத் தீர்த்துவைக்கும்வகையில் அவர்களுக்கிடையே ஓர் உடன்படிக்கை ஏற்பட்டால் நல்லது எனத் தமிழக முதல் மந்திரி திரு. சி. என். அண்ணுதுரை தெரிவித்துள்ளார். டீசல் என்ஜின் தொழிற்சாலை ஒன்றை, ஜப்பானிய ஒத்துழைப்புடன் நிறுவுவது சம்பந்தமான விழாவொன்றில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## ஒருவார வேலை நிறுத்தத்துக்கு இ. தொ. காங்கிரஸ் ஆயத்தம்

யாழ்ப்பாணம், வியா.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனது அங்கத்தவர்களை ஒருவார வேலைநிறுத்தத்திற்கு தயாராகும்படி தெரிவித்துள்ளது.

இம்மாதம்26ந்திகதிமுதல் ஒரு கிழமைக்கு தோட்டத் தொழிலாளர்கள் அடையாள வேலைநிறுத்தத்தில் குதிக்கவேண்டுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நிர்வாகசபை நேற்றிரவு தீர்மானித்துள்ளது.

தோட்டத் தொழிலாளருக்கு நியாயமான சம்பள உயர்வு வழங்கவேண்டும் என்றும் இவ்விஷயமாக தொழிலாளர் பலகாலமாக வற்புறுத்தி வந்தார்களென்றும் இ. தொ. காங்கிரஸைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்கம் சம்பள உயர்வு விஷயத்தில் தலையிட்டு அவசரகாலவிதிகளின் கீழ், தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளுக்கு15சதஉயர்வுவழங்கியுள்ளது அதே சமயம்வர்த்தக ஊழியருக்கு 40 சதம் உயர்வு வழங்கியுள்ளது.

## இலங்கையில் காந்தி நூற்ருண்டு விழா

### தேசிய கமிட்டி நியமிக்க யோசனை

கொழும்பு, புதன்

மகாத்மாகாந்தியின் நூருவது பிறந்ததினத்தைக் கொண்டாடுவதற்கு ஒரு தேசியக் கமிட்டி நியமிக்க வேண்டுமென்று, காந்தி சேவா சங்கம், சர்வோதய இயக்கம் சார்பாக திரு. கே. சி. தங்கராசா, திரு. ஏ. ரி. அரியரத்தினம் ஆகியோர் நேற்றுக் கொழும்பில் நடந்த ஒரு ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவித்தனர்.

இக்கூட்டம் செனட்சபை மண்டபத்தில் திரு. ஏ. இரத்னுயகா தலைமையில் நடைபெற்றது இந்தியதூதுவர் திரு. கண்டேவியா, கொண்டாட்டங்கள் எவ்விதத்தில் நடைபெறும் என்பதை விளக்கிக் கூறிஞர்.

8-ம் பக்கம் பார்க்க

## உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் அரசாங்க அதிபரை சந்தித்தனர்

யாழ்ப்பாணம், வியா.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தாமதமின்றி உடன் நிவாரணம் வழங்கப்படவேண்டுமென்றும், பொதுமராமத்து பகுதியினரால் பராமரிக்கப்பட்டு வரும்வீதிகள் திருத்துவதற்குநடவடிக்கைமேற்கொள்ளப்படவேண்டுமென்றும் வடபகுதி உள்ளூராட்சி மன்றங்களின் சார்பில் திருவாளர்கள் ஏ. ஜி. ராஜசூரியர், கே. வி. எஸ். சண்முகநாதன், எஸ். ராசேந்திரம் ஆகியோர் யாழ். அரசாங்க அதிபரை சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

தற்பொழுது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கிவருவதாகவும் காரியாதிகாரிகளின் பிரிவுகளிலிருந்து விபரமாக அறிக்கைவந்ததும் நிவாரணம் வழங்க வேண்டிய நடவடிக்கைள் எடுக்கப்படுமெனவும் அரசாங்க அதிபர் தம்மைக் காணச் சென்ற குழுவினரிடம் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

லைட் எஞ்சின்
PETTER லைட் எஞ்சினும் (1.5) பற்றி சாச்சரும் நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு. ஞானம், இரண்டாம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை. 2176

ரயர்கள்
புதிய குட்டியர் ரயர்கள் 750X20-10 PLY 520 X 14 விற்பனைக்குண்டு. பதிவுப் புத்தகத்துடன் வரவும். பொன்னுச்சாமி அன் சன்ஸ், பருத்தித்துறை. 2175

மாத இதழ்
வெற்றிமணி சிறுவர் மாத இதழ் பொங்கல் தொடக்கம் திரும்பவும் வெளிவருகிறது. கதை, கவிதை, கட்டுரைதேவை— வருடச் சந்தா ரூபா 3. தனிப்பிரதி 30 சதம். வெற்றிமணி, முள்ளியவளை. 2177

### தேவை

ஆங்கிலம், தமிழ் கற்ற பெண், தேன் சேகரிக்கும் முறைகளை பயிற்சி பெற 31-12-67க்கு முன் விண்ணப்பிக்கவும். உயிரியல் தெரிய வேண்டும். 33, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். 2173

வெல்டர்
திறமை வாய்ந்த எலக்றிக் வெல்டர் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். வ. பஞ்சாட்சரம், ஸ்ரீ முருகன் வெல்டிங், 46, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம். 2171

வேலை
கொம்பனிக்கணக்கு, நிர்வாகம் முதலிய துறைகளில் பலவருட அனுபவம் பெற்றவர் யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக ஸ்தாபனங்களில் நியாயமான சம்பளத்துக்கு அரைநேரம் அல்லது முழுநேரம் வேலைசெய்ய விரும்புகிறார். விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். விளம்பரதாரர், 13. மணிக்கூட்டு ஒழுங்கை நீராவியடி. 2178

## பொலிஸ் அதிபர் பார்வையிட்டார்

சங்கானை, புதன்
வலிகாமம் மேற்குப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை வடமாகாண பொலிஸ் அதிபர் இ. சுந்தரலிங்கம் பார்வையிட்டார்.

வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பாதிக்கப்பட்ட இடங்களையும் இடிந்த வீடுகளையும் பார்வையிட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் கிடைக்க ஒழுங்கு செய்திருப்பதாகத் தெரிவித்தார்.

## அங்கத்தவர்களுக்கு கோரிக்கை

சங்கானை பட்டின சபை எல்லைக்குள் வெள்ளத்தாலும். புயற்காற்றாலும் பாதிக்கப்பட்ட வீதிகள், ஒழுங்கைகள், மின்சாரக் கம்பங்கள் ஆகியவற்றின் சேதவிபரங்களை உள்ளூராட்சி அமைச்சு கோரியிருப்பதால் எல்லா வட்டாரத்திலும் உள்ள வீதிகள், ஒழுங்கைகள், மின்சாரக் கம்பங்கள் போன்றவற்றின் சேதவிபரங்களைத் தரும் வண்ணம் சகல அங்கத்தவர்களையும் பட்டின சபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் கோரியுள்ளார்.

சண்டிலிப்பாய்ப் பகுதியில் மாவு தட்டுப்பாட்டின் காரணமாக இதுவரை அரைரூத்தல் மா வழங்கப்பட்டதாகவும் இப்பொழுது மிகுதி மாவும் விநியோகிக்கப்படுகிறது எனவும் இதனால் பாதிமாவு பெற்றவர்கள் மிகுதி மாவையும் பெற்றுக் கொள்ளலாமெனவும் தெரிய வருகிறது.

## சைவ மகாசபை

ஊர்காவற்றுறை, புதன்
நாரந்தனைச் சைவ மகா சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. நா. நடராசா. உபதலைவர் திரு. வ. சோமசுந்தரம், காரியதரிசி திரு. செ. இராசதுரை, உபகாரியதரிசி திரு. க. ஈசுவரநாதன், தனாதிகாரி திரு. செ. விசுவலிங்கம். நிர்வாகசபையொன்றும் அமைக்கப்பட்டது.

## முதலாளிகளுக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், வியா.
காரைநகரில் நடைபெற்ற சுருட்டுத் தொழிலாளர்கள் சங்ககூட்டத்தில் இத்தொழிலாளரின் சம்பளத்தைக் கூட்டுவதற்கு சில முதலாளிகள் இசைந்து முன்மாதிரியாக நடந்து கொண்டது குறித்துப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

காரைநகர் கிராம சபைத் தலைவர் திரு. எஸ். விசுவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சுருட்டுத் தொழிலாளர் எல்லோருக்கும் அவர்கள் கோரும் சம்பள உயர்வு வழங்கப்படும்வரை தொடர்ந்து போராட்டம் நடைபெறுமென திரு. ஆ. துரைராஜசிங்கம் குறிப்பிட்டார். திரு. எஸ். ஆறுமுகம், திரு. கே. நாகராஜா ஆகியோரும் பேசினர்.

சுருட்டுத் தொழிலாளருக்கு உரிய சம்பளம் பெற்றுத்தருவதற்கு தொழில் கமிஷனர் உடன் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமெனக் கோரும் தீர்மானம் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## றேடியோ திருட்டு

சுழிபுரம், புதன்
சங்கானைமேற்கு சனசமூக நிலையத்துக்குச் சொந்தமான 300 ரூபா பெறுமதியான றேடியோ பட்டப் பகலில் களவுபோய்விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சனசமூக நிலைய வாசிகசாலை மண்டபத்திலுள்ள அலுமாரியில் வைக்கப்பட்ட இந்த றேடியோ பகல் ஒரு மணிக்கும் இரண்டு மணிக்கும் இடையில்தான் களவு போயிருக்குமென நம்பப்படுகின்றது. இதுசம்பந்தமாக சங்கானைப் பொலிசாரிடம் ஒரு முறைப்பாடு கொடுக்கப்பட்டுள்ளது.

## தந்திக்கம்பிகள் அறுந்தன

இமையாணன், வியா.
வெள்ளம் — கடும்காற்று காரணமாக தொண்டமனாற்றின் சந்தியில் பல நூற்றூண்டு காலத்திற்கு மேலாக இருந்த மிகப்பெரிய ஆலமரம் வேருடன்சரிந்துவிழுந்துள்ளது. இதனால் தந்திக் கம்பிகள் பல அறுந்துள்ளன.

## மாதரின் முன்மாதிரி

மல்லாவி, வியாழன்
உருத்திரபுரம் சர்வோதய மாதர் முன்னேற்றச் சங்கத்தினர் பதினைந்து ஏக்கர் காட்டை சிரமதான முறையில் வெட்டி நெல் விதைத்துள்ளனர்.

## பொருளாதார நெருக்கடிபற்றி சண்முகதாசன்

கொழும்பு, புதன்
இலங்கை எப்போதுமில்லாத பொருளாதார நெருக்கடியை இப்போது அனுபவித்துக்கொண்டிருப்பதாகவும் அன்னிய ஏகாதிபத்தியவாதிகள் நம்நாட்டில் தொடர்ந்து செலுத்திவரும் ஆதிக்கம்தான் இதற்குக் காரணம் என்றும் திரு. என் சண்முகதாசன் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினால் ஒழுங்குசெய்யப்பட்ட இலங்கை வர்த்தக சம்மேளனம், இலங்கை வாலிபர் கழகங்கள் சம்மேளனம் ஆகியவற்றின் மகாநாட்டில் பேசுகையில் கூறினார்.

கொழும்பு புதிய நகரமண்டபத்தில் நடைபெற்ற இம் மகாநாட்டுக்கு இலங்கை தொழிற்சங்க சம்மேளனத் தலைவர் திரு. வட்சன் பெர்னாண்டோ தலைமை தாங்கினார்.

திரு. சண்முகதாசன் மேலும் பேசுகையில், கைத்தொழில் மயத்தை விரைவுபடுத்துவதன் மூலமும் விவசாய அபிவிருத்தியில் துரித நடவடிக்கை மேற்கொள்வதன் மூலமும் பொருளாதார அபிவிருத்திக்கு வழி அமைக்கலாமெனக் குறிப்பிட்டார்.

## தட்டுப்பாடு

ஊர்காவற்றுறை, புதன்
தீவுப்பகுதிகளில் இப்போது உணவுப் பொருள்களுக்கும், மண்ணெண்ணை, தீப்பெட்டி. முதலிய பொருட்களுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதை சாக்காக வைத்துக் கொண்டு இப் பகுதியிலுள்ள சில கடைக்காரர்கள் கொள்ளை லாபமடிக்கிறார்கள்

## விளம்பரம்

### மனேஜர் தேவை

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசத்திற்கு ஒரு மனேஜர் தேவை.

தகுதி:- சர்வகலாசாலைப் பட்டதாரிப் பத்திரம் பெற்றவராகவோ அல்லது அரசாங்கத்தில் பரிபாலன சேவையில் 10 வருட அனுபவமுள்ளவராகவோ இருக்க வேண்டும்.

வயது:- 30 க்கும் 45 க்கும் இடையில்.

தட்டெழுத்து அடிக்கத் தெரிந்தவராயும், ஆங்கில அறிவும், கணக்கு வைப்பதில் அனுபவமுடையவராயும் இருக்கவேண்டும்.

பிணை:- ரொக்கப்பிணை ரூபா 2500/- காணிப்பிணை ரூபா 10,000/-

சம்பளம்:- ரூபா 250/மாதமொன்றிற்கு (எல்லாம் உட்பட) மேற்படிஸ்தாபன காரியதரிசி க. அருளானந்தம் அவர்களுக்கு, 25 முன்வீதி, யாழ்ப்பாணம்என்னும் விலாசத்திற்கு 25-12-67 க்குமுன் மனுப்பண்ண வேண்டும்.

361 காரியதரிசி.

இனும்! இனும்!! இனும்!!!
ரூபா 32-50 சதத்திற்கு
'கிரெஸ்டா'
செக் போட்ட கபர்டீன் கால்சட்டை வாங்குபவர்களுக்கு ரூபா 14-50 சதம் விலையிடப்பட்ட
'அல்பா' டக்ரோன் / ஹொட்டன் சேர்ட் இனும்
டயரும்ஸ்
54-60 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

திருவெம்பாவை பூஜைக்கு
தேவையான
* விளைவுகூடம்
* அபிஷேக திரவியங்கள்
* அபிஷேகச் சந்தனம்
[உடன் யந்திரத்தினால் அரைக்கப்பட்டது]
* அபிஷேகக் குங்குமம்
* அபிஷேக விபூதி
* அபிஷேக வாசனைதிகள்.
* கற்பூரம், சாம்பிராணி, ஊதுபத்திகள்
* நைவேத்தியப் பொருட்கள்
மற்றும்
சகல சாமான்களும் நிதானமான விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
கடந்த 35 ஆண்டுகளாக நற்சேவை புரிந்து நற்பெயர் பெற்றவர்கள்.
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
[மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]
53, கே. கே. எஸ். ரோட். பெரியகடை, யாழ்ப்பாணம்.
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 10-00 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெய்சங்கர், விஜயலட்சுமி நடித்த
இரு வல்லவர்கள்

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p.m.
Vincent Price, Susan Hart
in
Dr. GOLD FOOT &
THE BIKINI MACHINE

REGAL JAFFNA
Daily at 10-30 A. M.
4-45, 7-00 & 9-45 P.M.
SEAN CONNERY
AS Agent 007
in
GOLDFINGER

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] பிளாஸா [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
2-30, 6-30, & 9-30 p. m.
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] விஜிதா [ஹட்டன்]
மொடேர்ன் [பண்டாரவளை]
திரை உலகிலே என்றும் கண்டிராத புதுமைக்கதை! உணர்ச்சியின் விளிம்பைத் தொடும் சம்பவங்கள்! இனிமைக் கருத்து. கடைசிவரை பார்ப்போரின் மனதில் ஐயத்தை தோற்றுவிக்கும் கதையமைப்பு! சந்திரபாபு புதுமையான பாத்திரமேற்று நடித்து டைரக்ட் செய்த உன்னத சித்திரம்.!



சந்திரபாபு—கே. ஆர். விஜயா
சாவித்திரி - மனோகர் - விஜயஸ்ரீ
ராஜன்- "சோ" நம்பிராஜன்
ஸீடன்ட் சோமு-எம். ஆர். ஆர். வாசு
ஆகியோர் நடித்த விஸ்வபாரதியின்
தட்டுங்கள் திறக்கப்படும்
திரைக்கதை, டைரக்ஷன்: ஜே. பி. சந்திரபாபு
இசை: எம். எஸ். விஸ்வநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஆட்சி மொழி திருத்தமசோதா நிறைவேற ஒத்துழைப்பு அளியுங்கள்'

## இந்தியப் பிரதமர் இந்திரா மக்களிடம் வேண்டுகோள்

புதுடில்லி, டிசெ. 13

**ஆட்சி மொழிச்சட்ட திருத்த மசோதாவை நிறைவேற்ற ஒத்துழைப்பு அளிக்குமாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, பல்வேறு பிரிவு மக்களையும் வேண்டியுள்ளார்.**

நேற்று, லோக சபையில், மசோதமீதானவிவாதத்தில் குறுக்கிட்டுப் பேசுகையில், பிரதமர் இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

### வருத்தம்

மொழிப் பிரச்னையைத் தெருக்களில் முடிவு செய்வதற்கு முயற்சி எடுக்கப் பட்டுள்ளதையிட்டு அவர் வருத்தம் தெரிவித்தார்.

### சந்தேகம் நீக்க வேண்டியது அவசியம்

சரியாகவோ அல்லது தவறுதலாகவோ, இந்திமொழி பற்றி, இந்தி பேசாத மக்களின் மனதிலே சந்தேகம் ஏற்பட்டுள்ளதென்றும், வேலை வாய்ப்புகள் பற்றியும் அவர்கள் கவலை கொண்டுள்ளதாகவும் கூறிய பிரதமர், அம் மக்களின் சந்தேகங்களைப் போக்க வேண்டியது அவசியமெனக் குறிப்பிட்டார்.

### நோக்கம்

இந்த நோக்கத்துக்காகவே, ஆட்சி மொழி திருத்த மசோதா நிறைவேற்றப்பட வேண்டுமென்றார் அவர். இந்தியின் மதிப்பைக் குறைக்கும் நோக்கம் எதுவும் அம்மசோதாவுக்கு இல்லை என்றும் திருமதி இந்திரா காந்தி வலியுறுத்தினர்.

### காங்கிரஸ் திருத்தம்

இதற்கிடையில், மத்திய சேவைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஆங்கிலம் அல்லது இந்தி கட்டாய மொழியாக்கப்பட வேண்டுமெனக் கோரும் ஒரு திருத்தத்தை உத்தேச திருத்த மசோதாவுக்குக் கொண்டுவரக் காங்கிரஸ் பார்லிமெண்டரிக் கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

# வியட்னும் பிரச்னையை ஐ.நா.வில் சமர்ப்பிக்கும் அமெரிக்க திட்டம்

## வட வியட்னும் நிராகரித்தது

ஹனோய், டிசெ. 13

**வியட்னும் பிரச்னையை ஐ. நா. சபையில் சமர்ப்பிக்கும் அமெரிக்காவின் திட்டத்தை வட வியட்னும் நிராகரித்துள்ளது.**

**இத்தகவல், வடவியட்னுமின் உத்தியோகபூர்வமான பத்திரிகையான 'நாம் தானி'ல் நேற்று வெளியிடப்பட்டது.**

'மக்கள் அபிப்பிராயத்தை ஏமாற்றுவதற்கும், யுத்தத்தை மேலும் தீவிரப்படுத்தும் திட்டத்தை மறைப்பதற்கும் அமெரிக்கா எடுத்துள்ள ஒரு பெரிய நடவடிக்கையே இது' என அப்பத்திரிகை கூறியுள்ளது.

ஐ. நா. வில் வியட்னும் பிரச்னையைச் சமர்ப்பிக்கும் அமெரிக்க முயற்சி புதிய தொன்றல்ல வென்றும், முன்னரும் அமெரிக்கா இவ்விதம் முயற்சிசெய்துள்ளதாகவும் அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

### மைசூரில் பொதுத்துறை சினிமாஸ்டுடியோ

மைசூர், டிசெ. 13

பொதுத்துறையில் ஒரு சினிமா ஸ்டுடியோ நிறுவ மைசூர் அரசாங்கம் தீர்மானித்துள்ளது, இதற்கென பங்களூரிலிருந்து சிறிது தூரத்திலுள்ள காணியொன்று தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.



# வட வியட்னும் மீது அமெரிக்ககுண்டுவீச்சு

## கனடா வெளியுறவு மந்திரி கண்டனம்

இதற்கிடையில், பிரசல்ஸில், வடஅத்லாந்திக் பாதுகாப்பு ஒப்பந்த நாடுகள் மாநாட்டில் பங்குபற்ற வந்துள்ள கனடா வெளியுறவுமந்திரி திரு. போல் மார்ட்டின், வடவியட்னும் மீது குண்டு வீசுவதை நிறுத்துமாறு அமெரிக்காவைக் கேட்டுக்கொண்டுள்ளார்

வியட்னும் போரை முடிவுக்குக்கொண்டுவர அதுவே முதல் நடவடிக்கையாகும் என அவர் கூறினர்.

### லெபனனில் திரு. ஜாரிங்

பெய்ரூட், டிசெ. 13

மேற்கு ஆசியாவில் ஐ.நா. விசேஷ பிரதிநிதியாகிய திரு. ஜாரிங், பெய்ரூட் வந்து சேர்ந்துள்ளார். அவர் லெபனன் வெளியுறவுமந்திரியைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

லெபனன் ஜனதிபதியையும், பிரதமமந்திரியையும் அவர் சந்திப்பார்.

மேற்கு ஆசியாவிலுள்ள ஐ. நா. சமாதானப்படையின் தலைவரான ஜெனரல் புல்லுரும் பெய்ரூட் வந்துள்ளார்.

# ஆங்கிலத்தை எதிர்த்து வன்முறைக் கிளர்ச்சிகள்

## தொடர்ந்து நடைபெறுகின்றன

இது இப்படியிருக்க, இந்தியாவின் பல இடங்களிலும் தொடர்ந்து ஆங்கில எதிர்ப்புக் கிளர்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

டில்லியில், இந்த எதிர்ப்புக் கிளர்ச்சி, பல்கலைக் கழக வளவுக்குள் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. அங்கு இரண்டு பகுதி மாணவரிடையே கைகலப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து, 16 மாணவர்களைப் பொலீசார் கைது செய்தனர்.

வாரணசியில், ஐந்து சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சித் தலைவர்கள், ஆங்கில எதிர்ப்பு ஆர்பாட்டங்களையொட்டிக் கைது செய்யப்பட்டனர். பொலிசாரின் தடையுத்தரவை இவர்கள் மீறியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

அலஹபாத்தில், வன்முறைக்கும் பலொன்று, தபாற் கந்தோரொன்றைத் தாக்கியது.

ஹைதரபாத்திலும் ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்துள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

### சொந்த விண்கலம் இந்தியா தயாரிக்கும்

புதுடில்லி, டிச.13

விண்வெளி ஆராய்ச்சிக்கான தனது சொந்த விண்கலத்தைஇன்னும் 4 அல்லது 5வருடங்களில் இந்தியா தயாரிக்குமென இந்திய அணுசக்திக் கமிஷனின் தலைவர் டாக்டர் விக்ர்ராம்சாராபாய் தெரிவித்துள்ளார்.

# மேற்குஇந்தியபூகம்பம்

## இந்தியப் பிரதமருக்கு யூ தாண்ட் அனுதாபம்

நியூயோர்க், டிச.13

மேற்கு இந்தியாவில் ஏற்பட்ட கடும் பூகம்பத்தினல் விளைந்த உயிர்ச்சேதத்துக்கு ஐ. நா. பொதுக்காரியதரிசி யூதாண்ட், இந்திய பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கு ஓர் அனுதாபச் செய்தியை அனுப்பியுள்ளார்.



அச்செய்தியில், பூகம்பத்தினல் ஏற்பட்டுள்ள சேதத்துக்கு அவர் தமது வருத்தத்தைத் தெரிவித்திருப்பதுடன், இந்தியாவுக்கு ஐ.நா தன்னாலான உதவியைச்செய்யத் தயாராகவுள்ளதெனவும் அவர் அறிவித்துள்ளார்.

# பம்பாய் - பூனு பகுதிகளில் தொடர்ந்து நில அதிர்ச்சிகள்

## பூகம்பத்தில் இறந்தவர் 172

பம்பாய், டிச.13

**பம்பாய், பூனு ஆகிய இடங்களில், நேற்றிரவு சிறிய அளவிலும் பெரிய அளவிலும் நில அதிர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. சேதம் ஏதும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.**

பூனுவில், நேற்றிரவு 9 மணிக்குச் சற்றுப்பின்னரும் நள்ளிரவிலும் இரண்டு நில அதிர்ச்சிகள் ஏற்பட்டன. இவை இரண்டிலும், முதலாவது நில அதிர்ச்சி மிகவும் கடுமையானதாக இருந்தது. பம்பாயில், நள்ளிரவில்ஒரு நில அதிர்ச்சி ஏற்பட்டது.

நேற்று முன்தினம்கொய்ன நகரில்ஏற்பட்டபெரிய பூகம்பத்தைதொடர்ந்துஇன்னும் நில அதிர்ச்சிகள் ஏற்படலாமெனத் தெரிவிக்கப்பட்டது.

### இறந்தவர் 172

பூகம்பத்தில் இறந்தவர்கள் தொகை இப்போது 172 ஆக உயர்ந்திருப்பதாக உத்தியோகபூர்வமான வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

ஷோராப்பூரில் வீடிடிந்து விழுந்ததால் 2 பேர் உயிரிழந்தனர்.

கொய்ன நகரிலுள்ள மக்கள் அனைவரும் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளனர்.

### மின்சாரத்தடை

பூனுவில், தொழில்நிலையங்களில் 50சத வீதம் இன்னும் மூடப்பட்டே கிடக்கிறது. இதற்குக்காரணம், மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதேயாகும். பம்பாயில் நேற்று இரண்டாவது நாளாக, சினிமாக்கொட்டகைகள் யாவும் மூடப்பட்டிருந்தன.

### நிவாரணத்துக்கு நிதி உதவி

பூகம்ப நிவாரண வேலைகளுக்காக மகாராஷ்டிர அரசாங்கம் மொத்தம்ஒன்றரை லட்சம் ரூபாய் இதுவரை அளித்துள்ளது. மைசூ அரசாங்கம் 1 லட்சம் ரூபாய் அனுப்ப முடிவு செய்துள்ளது காஷ்மீர் அரசாங்கம் ரூ.10,000 அளிக்கத் தீர்மானித்துள்ளது.

கொய்னநகருக்கு விஜயம் செய்த மத்திய போக்குவரத்து மந்திரி டாக்டர் பி.கே. வி.ராவ், பூகம்பம் ஏற்பட்டதனல் கொய்ன அணைக்கு ... கூறியுள்ளார்.

### ஆசிரிய விருந்து

இமையாணன், வியாழன் பருத்தித்துறைமெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் இக்கல்லூரியின் கிறீஸ்தவ ஆசிரியர்கள் ஓர் இராப்போசன விருந்து நடத்தினர்கள். இதில் சி. ஆனந்தராசாவின் மெல்லிசை உட்பட பல கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

# 20லட்சம் தொன் மாவு கனடாவிடம் சீனு வாங்கும்

ஹொங்கொங், டிச. 13

சீனு, கனடாவிடமிருந்து அடுத்த வருடத்துக்கு 6 கோடி பவுண் பெறுமதியான 20 லட்சம் தொன் மா வாங்க உடன்படிக்கை செய்துள்ளது.

செங்காவலரின் கலாச்சாரப்புரட்சியால் நாட்டின் மா உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# கான்டன் மாகாணத்தில் செங்காவலர் மோதல்

## 100 பேர் மரணம்

இதற்கிடையில் சீனுவிலுள்ள கான்டன் மாகாணத்திலிருந்து ஹொங்கொங் வந்து சேர்ந்துள்ள அகதிகள் கான்டன் வர்த்தகக் கண்காட்சி இடத்துக்கருகே இரண்டு போட்டிச் செங்காவலர் பிரிவினர் நிகழ்த்திய சண்டையில் 100 பேர் வரை கொல்லப்பட்டனர் அல்லது காயத்துக்குள்ளாகினர் எனத் தெரிவித்துள்ளனர். இச்சண்டையில் 1000 பேர் ஈடுபட்டதாகவும் ஈற்றில் இராணு

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஏழைகளுக்குத் தொண்டு புரிதல் என் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் விருப்பமாகும். இந்த விருப்பம் எப்போதும் என்னை ஏழைகளிடமே கொண்டுபோய் சேர்த்தது. அவர்களுடன் சேர்ந்து அவர்களில் ஒருவனாகும் ஆற்றலையும் எனக்குத் தந்தது. — காந்திமகான்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்க ஹு கார்த்திகை மீ 28உ (14-12-67)

## சாப்பாட்டு விலை

வெள்ளத்துக்குப் பின் யாழ்ப்பாணத்திலே கடைச் சாப்பாட்டின் விலை பெரிதும் உயர்ந்துள்ளதாகப் புகார்கள் கிடைக்கின்றன. இதனால் பலர் சாப்பாட்டுக்குப் பதிலாக வேறு ஏதாவது சாப்பிட்டு அரைப்பட்டினி கிடப்பதாகத் தெரிகிறது. நிலைமை இப்படியே நீடிக்குமாயின் மக்களின் தேகநிலை பெரிதும் கெடுமாதலால், அரசாங்கம் இதில் உடன் தலையிட்டு, சாப்பாட்டு விலை அதிகரிக்காமல் செய்ய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏற்கெனவே 80 சதம் அல்லது ஒரு ரூபாய்விற்ற சாப்பாடு, வெள்ளத்துக்குப்பின் ரூ. 1-50-க்கு மேலும் அதிகரித்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. அரிசிவிலை அதிகரித்திருப்பதுடன், கடை ஊழியர்களின் சம்பளம் கூட்டப்பட்டுள்ளதால் சாப்பாட்டு விலையை உயர்த்த வேண்டி ஏற்பட்டுள்ளதாக சாப்பாட்டுக்கடைக்காரர் கூறுகின்றனர்கள். இக்காலத்தில் பல உணவுப பொருள்களுக்கும் தட்டுப்பாடும் கிராக்கியும் ஏற்பட்டிருக்கையில் சாப்பாட்டுக் கடை நடத்துவது சுலபமன்று. ஒரு கொத்து அரிசி (கல், உமி, மண், உட்பட) இரண்டு ரூபாய்க்கும், நல்ல ரக அரிசி ரூ. 2-20க்கும் தனிப்பட்ட சில மில்களில் ரூ. 1-50க்கும் விற்கப்படுகிறதாம். விற்பனை இலாகா நிலையத்தில் கொத்து ரூ. 1-05 சதத்துக்குக் கொடுக்க முடியும்போது சாப்பாட்டுக் கடைக்காரருக்கும் அவர்களது சராசரி தேவையைக் கணித்து, இதே விலைக்கு அரிசியை விற்பனை இலாகாவைக் கொடுக்கச் செய்ய முடியாதா?

இந்தியாவிலும் ரூபாய் மதிப்பைக் குறைத்ததும், சாப்பாட்டு விலை திடீரெனக் கண்டபடி உயர்ந்து பொதுமக்கள் மிகுந்த சங்கடத்துக்கு உள்ளானதும், தமிழகத்திலே சில அமைச்சர்கள் சாப்பாட்டுக்கடைக்காரர்களை நேரில் அழைத்துப் பேசி, அவர்களது கஷ்டங்களை அறிந்து அவற்றைத் தீர்க்கவும் அரிசி முதலிய உணவுப் பொருள்கள் அவர்களுக்கு நியாய விலைக்குக் கிடைக்கவும் நடவடிக்கை எடுத்ததுடன் பல ஒட்டல்களிலும் 80 காசுக்கு சாப்பாடு கிடைக்கும்படி ஏற்பாடு செய்தனர். இப்போதும் திருச்சி, சென்னை முதலிய பல நகரங்களிலும் இந்த விலைக்கு நல்ல சாப்பாடு கிடைக்க முடிவது குறிப்பிடத்தக்கது. அதே போல இங்கும் அதிகாரிகள், சாப்பாட்டுக்கடைக்காரர்களை அழைத்து, அவர்களுடன் கலந்து யோசித்து, சாப்பாட்டு விலையைக் குறைக்க எல்லா நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள வேண்டியது அவசர கடமையாகும். உணவு விஷயத்தில் தமிழகத்தைவிட இங்கு நிலைமை மோசமல்ல. சாப்பாட்டுக் கடைக்காரர்களும், இது முக்கிய பொதுஜன சேவை என்பதை உணர்ந்து ஒத்துழைத்து உணவு விலையை கூடுமானவரை குறைப்பரென்பதே நமது நம்பிக்கை.

## ஏன் இந்த வேற்றுமை?

இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தவிர, மற்ற எல்லாப் பகுதிகளிலும் நேரடியாக டெலிபோனில் பேசும் புதிய வசதியை ஏற்படுத்தப் போகிறார்களாம். இதற்கு ஐந்து கோடி ரூபாய் செலவாகுமென்றும், சில வெளிநாடுகள் இதற்கு உதவி செய்யலாமென்றும் கூறப்படுகிறது.

வேறு பல முக்கிய அபிவிருத்தி வேலைகள் செய்ய வேண்டியிருக்க, இவ்வளவு செலவில், இதற்கு என்ன அவசரமென்ற கேள்வி எழலாம். விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டு வரும் காலத்தில், ஒருவர் தம் வீட்டிலிருந்தபடியே, நேரடியாக ''டயல்'' செய்து தீவெங்கும் யாருடனும், குறைந்தசெலவில், தாமதமின்றிப் பேச முடிவதாயின் அது நல்லதுதான். இப்போது வேறு ஊர்களுக்கு டெலிபோன் பேச அதிக தவக்கமும் செலவும் ஆகிறது. புதிய வசதி ஏற்படின் இக்குறைகள் வெகுவாக நீங்கும்.

ஆனால் இவ்வசதியை வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கு மட்டும் ஏன் மறுக்கவேண்டும்? இந்த வேற்றுமை நடவடிக்கை சிறப்பாக தமிழ்ப்பேசும் மக்களிடையே அதிக அதிருப்தியையும் சந்தேகத்தையும் ஏற்படுத்துவதாக இருக்கும். தமிழ் பகுதி பிரதிநிதிகள், இவ்விஷயத்தில் அலட்சியமாக இருக்கப்படாது. எதிர்க்கட்சியைச் சேர்ந்த டாக்டர் என். எம். பெரேராவும் இதுகுறித்து ஆட்சேபித்துள்ளதாகத் தெரிகிறது. பிரதமரிடம் இதைப் பற்றியும் தெரிவித்து, வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் மாற்றாந்தாய்ப் பிள்ளைகள்போல நடத்தப்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

## மக்கள் அதிருப்தி

பண்டத்தரிப்பு, வியா.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் இலவசமாக வழங்கிய மாவு, சீனி, பருப்பு போன்ற உணவுப் பொருட்கள் விநியோகத்தில் மக்கள் பலர் அதிருப்திகொண்டுள்ளதாகத் தெரிகிறது. ஒவ்வொரு கிராம சேவையாளர் பகுதியிலும் வெவ்வேறு விதத்தில் இப்பங்கீடு நடைபெற்றதே இந்த அதிருப்திக்கு [illegible]

## சாரதிக்கும் கண்டக்டருக்கும் பாராட்டு

யாழ்ப்பாணம், புதன்

கடந்த 8ம் திகதி காலை 9மணிக்கு வவனியாவிலிருந்து புறப்பட்ட இ. போ. சபை பஸ் வண்டி அன்று பகல் 2மணிக்கு யாழ்ப்பாணம் வந்தடைந்த மகிழ்ச்சியால் அதில் பிரயாணம் செய்த 101 பிரயாணிகள் பிரஸ்தாப பஸ்ஸைச்செலுத்தி வந்தசாரதிக்கும் கண்டக்டருக்கும் சன்மானம் வழங்கினர்.

அனுராதபுரம் டிப்போ சாரதியான திரு. எம் இராசேந்திரனும், கண்டக்டர் திரு. ஜே. எம். நூர்தீனும் பெருமழை. புயல்காரணமாக ஏற்பட்டிருந்த பல கஷ்டங்களைச் சமாளித்து திறமையுடன்வாகனத்தைச் செலுத்தித் தங்களை யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் சேர்த்ததற்காக பிரயாணிகள் இவர்களுக்கு சன்மானம் வழங்கிப்பாராட்டினர். இப்பிரயாணிகள் வவனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் பிரயாணம் செய்தனர்.

## அனலைதீவில் வேறு பொருட்கள் வாங்கினால்தான் சீனி

அனலைதீவு, புதன்

அனலைதீவிலுள்ள கடைகளில் ஒருறாத்தல் சீனி 84 சதத்திற்கு விற்கப்படுகிறது. அதுவும் வேறு பொருட்கள் வாங்கினால்தான் வியாபாரிகளிடமிருந்து பெறக் கூடியதாக இருக்கிறதாம். இங்கு தீப்பெட்டி 12 சதத்திற்கும் கிடைப்பது அரிது அரிசி 1ரூபா85 சதமாக உயர்ந்துள்ளது.

## இன்றைய பலன்

14-12-67வியாழக்கிழமை கார்த்திகை மீ 28 உ

நட்சத்திரம்- பரணி பகல் 9-47 மேல் கார்த்திகை.

திதி- திரயோதசி. பின் இரவு1-41மேல்சதுர்த்தி.

சுபநேரம் - 7-51—9-21

ராகுகாலம்- 1-51—3-21.

மேஷம்- எதிர்பார்த்ததில் தடை, ஏக்கமிகுதி

ரிஷபம்- கரும் பென நினைத்தது கசக்கவும் செய்யும்.

மிதுனம்- வாக்குச்சித்தி வாழ்த்தும் கிடைக்கும்.

கடகம்- தாய்வழித் தனம் தக்க சமயத்தில் உதவும்.

சிங்கம்- வாகன விருத்தி, வளமும்பெருகும்.

கன்னி- பிள்ளையால் பெருமை, இன்புற்று வாழ்தல்.

துலாம்- ஆயிரம் எண்ணங்கள், அலைமோதும் அடக்கமே நன்று.

விருச்சிகம்- இதயங்கள் இணையும் இன்பம் பொங்கும்.

தனுசு- தேன் சொட்டும் வாழ்வு தேள் கொட்டப் பார்க்கும்.

மகரம்- தந்தையின் கருணை தடைகள்விலகும்.

கும்பம்- புதிய பாதை, புதுமையில் நாட்டம்.

மீனம்- மன்ம் போல் வாழ்வு, மகிழ்ச்சிப் பெருக்கு.

சோதிடக் கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை



# 2000 அந்தர் விதை வெள்ளத்தில்

## 25,000 ஏக்கர் நெற்பயிர் முற்
## மிளகாய், சின்னவெங்காயம், புகை

யாழ்ப்பாணம், வியாழ

**யாழ்ப்பாண மாவட்டத்தில் பெருவெள்ளம் காரணமாக பயிர்ச்செய்**
**முற்றுகப் பாதிக்கப்பட்டுள்ளது. 300 ஏக்கர் நிலத்தில் பயி**
**டப்பட்ட மிளகாயும், 600ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்ட சின்**
**வெங்காயமும், 125 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்ட உருளை**
**கிழங்கு விதைகளும் சேதமடைந்துள்ளன.**

**சுமார் 2000 அந்தர் விதை உருளைக்கிழங்கு வெள்ளத்தில் மூழ்கடி**
**கப்பட்டு அழுகிவிட்டது. 25 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர் நா**
**மடைந்துவிட்டது.**

வடபகுதியில் தொடர்ந்து பெய்த பேய் மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு வடபகுதி விவசாயிகளைப் பெருமளவில் பாதித்துள்ளதாகவும், சகல பயிர்ச்செய்கைகளும் முற்றுகச் சேதமடைந்துவிட்டதாகவும், தமது பொருட்களையும் பங்கீட்டுப்புத்தகங்களையும் அடகு வைத்து தத்தம் பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்ட வடபகுதி விவசாயிகள் இப்பொழுது வெறுங்கையுடன் நிற்கதிக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்கள் என்றும் விவசாயப்பகுதி அதிபர் திரு. என். ஜெயசீலன் நமது நிருபரிடம் கூறினார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது: வடபகுதியில் ஏற்பட்ட பெருவெள்ளம் பொதுமக்களைவிட விவசாயத்தையே பெரிதும் சேதப்படுத்தியுள்ளது. வடபகுதியில் பயிரிடப்பட்ட உருளைக்கிழங்கு, வெங்காயம், புகையிலை, மிளகாய், நெல் போன்றவற்றின் பயிர்ச்செய்கை மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் ஏற்பட்ட வெள்ளததினால் 125 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்ட உருளைக்கிழங்குப் பயிர் முற்றுகச் சேதப்படுத்தப்பட்டுள்ளது. பயிரிடப்பட்டிருந்த மற்றும் சுமார் 2000 அந்தர் விதை உருளைக்கிழங்கு வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்டுஅழுகிவிட்டது. ஏனைய விதை கிழங்குகள் வெள்ளத்தினால் சிதைக்கப்பட்டுவிட்டன. முன்னர் 37 ரூபாவுக்குக் கொடுக்கப்பட்ட விதைகிழங்கைஇம்முறைஅந்தர்67 ரூபாவுக்கு வாங்கியே விவசாயிகள் பயிரிட்டிருந்தனர். முன்னிலும் பார்க்க பன்மடங்கு அதிகமான ஏக்கர் நிலத்தில் உருளைக்கிழங்கைப் பயிரிட்ட விவசாயிகள் தமது பொருட்களையும், பங்கீட்டுப்புத்தகங்களையும் அடகுவைத்தே விதைப்புக்குச் செலவு செய்திருந்தனர். திறமையுள்ள யாழ். விவசாயிகள் மீண்டும் உற்சாகத்துடன் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கு அவர்கள் அரசாங்கத்தின் உதவிகளையும் தாராளமான வெள்ள நிவாரண நிதியையுமே எதிர்பார்த்துள்ளனர்.

### சின்னவெங்காயம்

வடபகுதியில் 600 ஏக்கர் நிலத்தில் சின்னவெங்காயம் பயிரிடப்பட்டது. இதில் வடமராட்சிப்பகுதியில் 150 ஏக்கரிலும் தீவுப்பகுதியில 450 ஏக்கரிலும் சின்னவெங்காயம் பயிரிடப்பட்டது. இவை முற்றுகவே பாதிக்கப்பட்டுள்ளன. இலங்கையின் சுயதேவையைப் பூர்த்தி செய்து பிரதமரின் பாராட்டையும், நன்றியையும் பெற்ற வடபகுதி வெங்காயப் பயிர்ச் செய்கையாளர்கள் வெள்ளச்சேதத்தினால் மனமுடைந்து காணப்படுகிறார்கள். இப்பயிர்ச் செய்கையாளர்கள் அரசாங்கத்திடம் வெள்ள நிவாரண நிதியை எதிர்பார்த்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் 3
ஏக்கர் நிலத்திலான ம
காய்ப்பயிர் முழுவது
வெள்ளத்தினால் அழிந்து
ளது. வடமராட்சி, தெ
மராட்சிப் பகுதிகளின் ம
காய்ப் பயிர்ச் செய்கை
ளர்கள் பெரும் நஷ்டத்து
குள்ளாகியுள்ளனர். முன்
ரிலும் பார்க்க இம்மு
மிளகாயும் பெருமள
பயிரிடப்பட்டது கு
பிடத்தக்கது.

வடமாகாணம் முழுவ
லும் நெற்பயிர்ச் செய்
யும் இடத்துக்கிடம் கடு
யாகப் பாதிக்கப்பட்டுள்ள
இதில் சுமார் 25 000
கர் நிலத்தில் நெற்பயி
வெள்ளம் அழித்துள்ள
ஏரிகளையும், குளங்களை
அடுத்துச் செய்யப்ப
நெற்பயிர்களை வெள்
பலநூற்றுக் கணக்கான
கர்க்கணக்கில் அடித்
கொண்டு சென்றுவிட்ட
பாதிக்கப்படாத சில இட
களிலும் அறுவடை திரு
கரமாக இருக்குமென எ
பார்க்கமுடியாது. (வி.

## நிவாரணம் வழங்ககோரிக்

யாழ்ப்பாணம், விய
யாழ்ப்பாணத்தில் கட
சில தினங்களாக விட
பிடியாகப்பெய்தபெருமழை
யினாலும், வீசிய கடுங்கா
றினாலும் சிறகுவலைகள் அ
ளுண்டு சென்றதால் இ
குள்ள மீனவர்கள் தொட
ந்து தொழில் செய்யமு
யாத நிலையில் மிகவும் க
டப்படுகின்றார்கள் என்று
இவர்களுக்கு மிகவிரைவி
நிவாரணம் வழங்கவேண்
மென்று, கடல் தொழி
இலாக அமைச்சை பா
யூர் மக்கள் முன்னேற்ற
சங்க சனசமூகநிலையம் கே
டுள்ளது. மேற்படி சங்க
யாழ்ப்பாணம் எம். ..
சாங்க அதிபர் ஆகியோ
ருக்கும் இது சம்பந்தமா
கோரிக்கை விடுத்துள்ள

## உற்பத்தி பாதிப்

பண்டத்தரிப்பு, விய
பண்டத்தரிப்பில் கூட்டு
வுச்சங்க மூலம் விநியோகி
கப்பட்ட விதை கிழங்குகள்
பயிரிட்டவர்கள் பெரு
ஏமாற்றம் அடைந்துள்
ளர். தொடர்ந்து பெய்
பெரு மழை காரணமா
கிழங்குகள் அழுகி சேத
டைந்துவிட்டன. வெங்
யம் பயிரிட்டவர்களும் இ
போகத்தில் அதிக விளை
சலை எதிர்பார்க்க முடியா
என்று கவலைகொண்டுள்
ளர்.

### ஆசிரியருக்கு கடிதங்கள்

## முடிவு என்ன?

யாழ்ப்பாணம் பெரும் பகுதி திருமணப் பதிவுகாரியஸ்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு, விண்ணப்பித்தவர்கள் பரீட்சை எழுதி பின்னர் இவ்வருடம் ஜனவரிமாதம் 21-ந் திகதி நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றினர். ஆனால் சுமார் ஒருவருடமாகியும் இன்னும் முடிவு தெரிவிக்கப்படவில்லை. எவரும் நியமிக்கப்பட்டதாகவும்தெரியவில்லை. இப்பதவி நியமனத்தில் அரசியல் தலையீடு இருப்பதாகவும் இதுதான் முடிவு தெரியாமல் இருப்பதற்குக் காரணம் என்றும் சில பகுதிகளில் கூறப்படுவது உண்மையா?

செ. சுந்தரலிங்கம்
யாழ்ப்பாணம்.

ஃ ஃ ஃ

## ஏன் இந்தப் பாகுபாடு?

துன்னாலை வடக்கு கிராம சேவையாளர் பகுதியில் சீனி மா, தேயிலை இலவசமாகக் கொடுக்கப்பட்டன. ஆனால் அப்பொருட்கள்குறிப்பிட்ட ஒரு சிலருக்கே வழங்கப்பட்டது. சிலருக்கு இப் பொருட்கள் வழங்கப்படவில்லை. இது சம்பந்தமாக கிராம சேவையாளரிடம் கேட்ட போது வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்குத்தான் இப் பொருட்கள் கிடைக்குமாம் அப்படியாயின் துன்னாலை தெற்கு சங்கக் கடையும் (கோயிற் சந்தையடி) கொடிகாமம் சமாஜமும் சகலருக்கும் எப்படி இப் பொருட்களை வழங்கியது. ஒவ்வொரு ஊர் சங்கக் கடைக்கும் சட்டப் பிரமானம் வேவ்வேரு? இது நியாயமா? அரசாங்கத்தால் வழங்கப்படும் பொருட்களை வழங்குவதிலும் தில்லு முல்லா?

கு. ப. லோகநாதன்.
கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண மாவட்டத்தில்

# விதை உருளைக்கிழங்கு மூழ்கி அழுகின

## முற்ருக நாசம்
## புகையிலை அழிவு

வியாழன்
ர்ச்செய்கை
தில் பயிரி
ட்ட சின்ன
உருளைக்

மூழ்கடிக்
பயிர் நாச

ட்டத்தில் 300
திலான மிள
முழுவதும்
ல் அழிந்துள்
ாட்சி, தென்
திகளின் மிள
செய்கையா
ம் நஷ்டத்துக்
னர். முன்ன
இம்முறை
பெருமளவில்
து குறிப்

ம் முழுவதி
ிர்ச் செய்கை
கிடம் கடுமை
ப்பட்டுள்ளது
25 000 ஏக்
நெற்பயிரை
ழித்துள்ளது.
குளங்களையும்
செய்யப்பட்ட
வெள்ளம்
ணக்கான ஏக்
அடித்துக்
ன்றுவிட்டது.
த சில இடங்
வடை திருப்தி
குமென எதிர்
து. (வி. நி.)

## ணம்
## காரிக்கை

ாணம், வியா.
த்தில் கடந்த
ாக விடாப்
்தபெருமழை
ிய கடுங்காற்
துவலைகள் அள்
றதால் இங்
ர்கள் தொடர்
செய்யமுடி
மிகவும் கஷ்
ர்கள் என்றும்
மிகவிரைவில்
வழங்கவேண்டு
ல் தொழில்
மச்சை பாஷை
முன்னேற்றச்
நிலையம் கேட்
ற்படி சங்கம்
எம். .. அர
ர் ஆகியோர்
சம்பந்தமாக
விடுத்துள்ளது.

## பாதிப்பு

ரிப்பு, வியா.
ப்பில் கூட்டுற
ம் விநியோகிக்
த கிழங்குகளை
ள் பெரும்
அடைந்துள்ள
ர்ந்து பெய்த
காரணமாக
ழுகி சேதம
ன. வெங்கா
டவர்களும் இப்
அதிக விளைச்
ர்க்க முடியாது
கொண்டுள்ள

## போட்டியிலிருந்து விலகினுர்

யாழ்ப்பாணம், வியா. சுன்ஞகம் பட்டினசபைத் தேர்தலில் ஏழாம் வட்டாரத்தில் போட்டியிட முன்வந்த திரு. ச. சின்னத்தம்பி போட்டியிலிருந்து வாபஸ் பெற்றுக்கொண்டதாகத் தெரிவிக்கின்ருர்.

கொழும்பில்

## பனம் பொருளுக்கு கிராக்கியில்லையாம்

யாழ்ப்பாணம், வியா. யாழ்ப்பாணம் விற்பனவு இலாகா யாழ்ப்பாண உள்நாட்டு விளைபொருட்கள் உட்பட, பனம்பண்டம், பனம் பொருட்களையும் கொழும்பு தேசிய சந்தைக்கு ஏற்றுமதி செய்து வருவதாகத் தெரிகிறது.

கொழும்பு தேசிய சந்தையில் யாழ்ப்பாணம் மரக்கறி மற்றும் கிழங்குவகை ஆகியன நல்ல விலைபோகின்றதாயினும் பனம் பொருட்கள் பனம் பண்டம் அதிகமாக விற்பனையாவதில்லையெனவும் தெரிகிறது.

கருணைக் கிழங்கு யாழ்ப்பாணப் பகுதியில் அதிகம் உற்பத்தி செய்யப்படுகின்றதாயினும் வெளியூர்களில் இதற்குக் கிராக்கி இல்லையென அறியப்படுகிறது.

## அகதிகளுக்கு உடுவில் கி.சபை சேவை

உடுவில், புதன் 'கடந்தவாரத்தில் பெய்த விடாமழையினுல் உடுவில் கிராமசபைப்பிரதேசத்தில், தாவடி, இணுவில், சங்குவேலி ஆகிய கிராமங்கள்மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இக்கிராமங்களில் தாழ்ந்த பகுதிகளில் வசித்து வந்த மக்கள் குடிபெயர்ந்து பொது ஸ்தாபனங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். வெள்ளம் வற்றுவதற்கு இன்னும் ஒரு வாரமேனும் செல்லும் என நம்பப்படுகிறது, குடிபெயர்ந்துள்ள மக்கட்கு இக்கிராமசபை பாண், சீனி, தேயிலை, வாழைப்பழம், கிழங்குகள் ஆதிய னஇலவசமாக விநியோகம்செய்துவருகின்றது.

## இந்தியாவில் ரஷ்ய வர்த்தக தூதுகோஷ்டி

புதுடில்லி, டிசெ. 13

அடுத்த வருடத்துக்கான இந்திய—ரஷ்ய வர்த்தக உறவுகள் பற்றிப் பேசுவதற்கென, ரஷ்ய வர்த்தக தூதுகோஷ்டி ஒன்று நேற்று இங்கு வந்து சேர்ந்தது.

அவர்கள் தமது பேச்சு வார்த்தைகளை இன்று ஆரம்பித்துள்ளனர். இப்பேச்சு வார்த்தைகள் 10 நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெறும்.

## ஆசிரியர் இடமாற்றம் குறித்து தூது கோஷ்டி பேட்டி

### கவனிப்பதாக பருத்தித்துறை எம். பி. உறுதி

வல்வெட்டித்துறை, புதன் 'முதலாந்தர குமாஸ், தாவை மூன்ருந்தரக் குமாஸ்தாவின் கீழ் சேவை செய்ய அனுமதிக்காதபோது, சேவையிலும் தராதரத்திலும் கூடிய ஆசிரியர்களை சேவையிலும் தராதரத்திலும் குறைந்த ஆசிரியர்களின்கீழ் சேவைசெய்ய அனுமதிக்கலாமா''?

வடமராட்சி ஆசிரியர் சங்கத்தின் தூது கோஷ்டியொன்று பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினத்தை நேற்று இரவு அவரது இல்லத்தில் சந்தித்து ஆசிரியர் இடமாற்ற விஷயமாகவிவாதித்தபோது இப்படிக் கேட்டது.

தூதுக்குழுவினரின் கோரிக்கைகளை அனுதாபத்துடன் கேட்ட திரு. துரைரத்தினம், தற்போது நடைமுறைப்படுத்தும் பாடசாலைகள் புனரமைப்புத் திட்டம் நிறைவேற்றப்படும் வரை ஆசிரியர்களின் இடமாற்றத்தைப் பின்போடும்படி கட்சியின் ஏனைய அங்கத்தவர்களுடன் சேர்ந்து முயற்சிப்பதாக வாக்களித்தார்.

மேலும் அவர் கூறுகையில் இவ்விடமாற்றம் ஆசிரியர்களின் பதவி உயர்வைப் பாதிக்குமென்றும், யாழ். மாவட்டத்தில் பட்டதாரி ஆசிரியர்கள் மேலதிகமாக இல்லையென்பதைப் புனரமைப்பின் பின்னர் அறிய முடியுமென்றும், கலைப்பட்டதாரிகளுக்கும் விஞ்ஞானப் பட்டதாரிகளுக்கு மிடையே இடமாற்ற விஷயத்தில் பாகுபாடு காட்டக்கூடாதென்றும், கலைப்பட்டதாரிகள் உயர்தர வகுப்புக்களில் தமிழ், தமிழ் இலக்கியம் சமயம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைப் படிப்பித்து வருகிருர்களென்றும், கலைப் பட்டதாரிகளில் பலர்இரண்டாம் மூன்ருந்தர அதிபர் பதவிகளை ஏற்க இருப்பதாகவும் இவ்வேளையில் இவர்களை இடமாற்றஞ் செய்வது பொருத்தமற்றதென்றும் கூறினுர்.

## மீனவர் கஷ்டம் தீர்க்கநடவடிக்கை

யாழ்ப்பாணம், வியா. சென்றவாரம் வீசிய கடும் காற்றினுலும் மழையினுலும், சேதப்படுத்தப்பட்டும் கடலோடு அள்ளப்பட்டும் போன சிறகுவலைகளால் கஷ்டத்துக்குள்ளான சிறகுவலைத்தொழிலாளருக்கு உதவி யளிப்பதற்காக யாழ்ப்பாணப் பகுதி மீன்பிடி பரிசோதகர்களான திரு. இராமநாதன், திரு. பொன்னம்பலம்ஆகியஇருவரும்கூனிசா என்னும் இயந்திரப் படகு மூலம் கல்முனை, மண்டைதீவு, காரைதீவு, அரியாலை ஆகிய இடங்களைப் பார்வையிட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல்கூறியதுடன் அவர்களின் கஷ்டங்களை நிவிர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்க சன சமூக நிலையம் இதுசம்பந்தமாக இவர்களுடன் [illegible] கொண்டிருந்தது.

## பிரயாணிகளின் தேவைகள்

யாழ்ப்பாணம், புதன் வடபகுதியிலுள்ளமுக்கிய புகையிரத நிலையங்களிலும், பஸ்நிலையங்களிலும் பொதுசன பாவிப்புக்கான டெலிபோன் வசதிகளையும், தபால்பெட்டிகளையும் பிரயாணிகளின் நலனை முன்னிட்டு நிறுவித்தருமாறு வட இலங்கைப் பொதுப் பிரயாணிகள் சம்மேளனக் காரியதரிசி திரு. ரி. வேலுப்பிள்ளை போக்குவரத்து அமைச்சரைக் கோரியுள்ளார்.

அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

பிரயாணத்துக்குத் தயாராக பஸ்நிலையத்திலோ அல்லது புகையிரதநிலையத்திலோ காத்திருக்கும் பிரயாணிகளின் அவசர தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்யும் இச் சாதனங்களை நிறுவித்தருவதன் மூலம் பிரயாணிகள் பெரிதும் நன்மையடைவார்கள்(வி நி)

## ''மேலும் உதவி வழங்குக''

யாழ்ப்பாணம், வியா. வட்டுக்கோட்டையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக இலவச உணவு வழங்குமாறு வட்டுக்கோட்டை நலன்புரி சங்கம் அரசாங்கத்தைக் கேட்டதைத் தொடர்ந்து வட்டுக்கோட்டைப் பிரிவுக் காரியாதிகாரி உடன் நடவடிக்கை மேற்கொண்டதற்காக மேற்படி சங்கக்காரியதரிசி திரு. செ. பரராசசேகரம் கடிதமூலம் நன்றி தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டையில் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு மேலும் இலவச உணவுப்பொருட்களை வழங்கியும், நிவாரண நிதிவழங்கியும் உடன் உதவி அளிக்குமாறுஅக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. (வி. நி.)

## மொரிஷஸ் பிரதமர் இந்தியா வந்தார்

புதுடில்லி, டிசெ. 13

மொரிஷஸ் பிரதம மந்திரி திரு. ராம் குலாம் இன்று புதுடில்லி வந்துசேர்ந்தார். அவர் இந்தியாவில் ஒரு வார சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

இன்று காலை அவர் பாலம் விமான நிலையத்தில் வந்திறங்கியபோது அவரை இந்தியத் துணைப் பிரதமர் திரு. தேசாயும், மொரிஷஸிலுள்ள இந்திய ஸ்தானிகரும் வரவேற்றனர்.

திரு. ராம் குலாம், இந்தியாவில் தங்கியிருக்கையில் இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்துப் பேசுவார். அவர் இந்திய ராஷ்டிரபதியையும் உப ராஷ்டிரபதியையும் கூடவே சந்திப்பார்.

அவர் வெள்ளிக்கிழமை [illegible] பம்பாய் புறப்படுவார்.

## சேவைக்கு பாராட்டு

கோப்பாய், புதன் கோப்பாய் இந்துநாவலர் தமிழ்க்கலவன் பாடசாலையில் கடந்த 40 வருடகாலம் ஆசிரியராகவும், தலைமைஆசிரியராகவும் சேவைசெய்து ஓய்வுபெற்ற திரு. மு. வேலாயுதபிள்ளைக்குப் பாடசாலை ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் பாராட்டுவிழா நடாத்தப்பட்டது. இவ் விழா பதில் அதிபர் திரு. வே. தம்பையாதலைமையில்நடைபெற்றது.

ஆசிரியர்கள் திரு. சி. நடராசா, திருமதி கு.சரஸ்வதி, திருமதி வே. இரத்தினம் ஆகியோரும் மாணவிகள் செல்வி இலட்சுமி, செல்வி சரோஜினிதேவி ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன. இறுதியில் ஆசிரியர் திரு. மு. வேலாயுதபிள்ளை தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி கூறினுர்.

## அனலைதீவில் நிவாரணத்துக்கு மகாநாடு

அனலைதீவு, புதன் அனலைதீவில் வெள்ளத்தால்பாதிக்கப்பட்ட 225க்கு அதிகமான குடும்பங்களுக்கு அரசினரால் மாவு, சீனி, தேயிலை, உப்பு போன்ற உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டது. தீவுப் பகுதி காரியாதிகாரி திரு. விஞயகலிங்கம் அனலைதீவுக்கு விஜயம் செய்து அனலைதீவில் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு, கிராமச் சங்க உறுப்பினர்களையும் அழைத்து பேச்சுவார்த்தைகள் நடாத்தினுர்.

அனலைதீவு கிராமச்சபைக் கட்டிடத்தில் நடந்த இம் மகாநாட்டில் கிராமசேவையாளர் திரு. அருள்நாயகம் கிராம முன்னேற்றச் சங்கம், அனலைதீவு முற்போக்கு வாலிபர் இயக்க முக்கியதலைவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். இப்பகுதியில் ஏற்பட்ட சேதாரங்களைஇச்சங்கங்களின் உறுப்பினர்கள் காரியாதிகாரிக்கு எடுத்துரைத்தனர்.

மாணவர்

## ஓய்வு நாட்களில் என்னசெய்கின்றனர்?

பண்டத்தரிப்பு, புதன் விடுமுறை நாட்களில் மாணவர் எவ்விதம் நடக்கின்றனர் என்பதை அறியவும் அவர்களின் கல்வி, வீட்டு வேலைகள் எவ்விதம் நடைபெறுகின்றன என்பதையறியவும், பிரயோசனமாய் அவர்கள் தமது விடுமுறைகளைக் கழிக்கிருர்களா என அறியவும் 'மாணவர் நாளாந்த வழிகாட்டி' என்னும் பத்திரம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. பெற்ருேரும் இப்பத்திரத்தில் கையொப்பமிட வேண்டும். இப்பத்திரங்கள் பாடசாலை மீண்டும் ஆரம்பமாகும்போது சமர்ப்பிக்கப்படவேண்டும்.

இளவாலை என்றியரசர் கல்லூரி அதிபர் வண. அல்பிரட் சுவாமியார் இப்புதிய நடவடிக்கையை மேற்படி பாடசாலையில் மேற்கொண்டுள்ளார்.

[5ம் கலத் தொடர்ச்சி]

வானந்துளங்கிலென், மண் கம்பமாகிலென் மால்வரையும்,
தானந்துளங்கித்தலை தடுமாறிலென் தண்கடலும்,
மீனம்படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்டு,
ஊனமொன்றில்லா ஒருவனுக்காட்பட்ட உத்தமர்க்கே.

—அப்பர் சுவாமிகள்

## ஜயசரன் எழுதுவது

பம்பாய் ராஜ்யத்திலே பூகம்பம்ஏற்பட்டு, கொயினு என்ற ஊரே நாசமாகிவிட்டதாக பரிதாபச் செய்திகள் கிடைக்கின்றன. 172 பேர் கொல்லப்பட்டதாயும், ஆயிரத்துக்கு மேலானவர்கள் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறுவதாயும், நூற்றுக்கு 80 வீடுகள் இடிந்து விழுந்துவிட்டதாகவும் தெரிகிறது. சேதங்கள் இன்னும் எவ்வளவோ!

அங்கு பூமி அதிர்ச்சிகள் தொடர்ந்து ஏற்பட்டு வருகின்றனவாம். பூஞ, பம்பாய்இந்நகரங்களிலும் அதிர்ச்சி ஏற்பட்டு பல பெரிய கட்டிடங்கள் விரிசல் கண்டிருப்பதாயும் தெரிகிறது. பாவம்!

இலங்கையில் வெள்ளச் சேதம் ஏற்பட்டதைக்கேட்டதும் இந்தியா பல்லாயிரம் மதிப்புள்ள துணிகளை அது கஷ்ட நிவாரணத்துக்காக அனுப்பி தன் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டது.

முன்னர் வெள்ளம் ஏற்பட்டபோதும் நமக்கு இந்தியா பெரிதும் உதவியுள்ளது. இந்தியாவில் பூகம்பம் ஏற்பட்டுள்ள இச்சமயத்தில் இலங்கையும் தன் அனுதாபத்தைத் தெரிவித்துள்ளது. அடையாளமாக ஏதாவது உதவியும் செய்யவேண்டியது நமது மனிதாபிமான நன்றிக்கடமையாகும்.

ஃ ஃ ஃ

பூகம்பம்எந்த இடத்தில், எப்போது வரும் என்பதை நவீன விஞ்ஞானிகளும் முன்கூட்டியே கூறமுடியவில்லை. கூறியிருந்தால், கொயினு நகரமக்கள் தக்க பாதுகாப்புச் செய்திருக்கக்கூடும். வெளிநாடுகளிலும் பூகம்பங்கள் ஏற்பட்டு பெரும் நாசங்களை விளைவித்து வருகின்றன. பூகம்பம்வருமென்பதை முன்கூட்டியே அறிவித்தாலும்கூட, அதை தடுத்துநிறுத்தக்கூடிய வல்லமை மனிதனுக்கு ஏற்படுமா என்பது சந்தேகமே.

'ஏ மனிதா! எல்லாம் உன்னுல் முடியுமென்று மண்டைக்கனம் கொள்ளாதே. உனக்கு அப்பால்பட்ட சக்தி ஒன்று உள்ளது என்பதை மறவாமல், ஒழுங்காக நட' என்று நமக்கெல்லாம் எச்சரிக்கை செய்வது போலுள்ளது இந்தப் பூகம்பம். நம் இலங்கையில் இது ஏற்படாமல் இருந்ததற்காக நாம் ஆறுதல் கொள்ள வேண்டும். பூகம்பத்தைவிட வெள்ளம் தேவலாமல்லவா?

ஃ ஃ ஃ

முன்னர் பீகாரிலும், குவெட்டாவிலும் பெரிய பூகம்பத்தால் பேரழிவு ஏற்பட்டபோது. மகாத்மா காந்தி என்ன சொன்ஞர் தெரியுமா? மனிதன் செய்யும் அக்கிரமத்துக்குத் தண்டனையாகவே இவ்விதம் கடவுள் செய்விக்கிருர் என்ருர்.

இப்போது அவர் இருந்திருப்பின் இந்தபூகம்பத்துக்கு என்ன காரணம் கூறியிருப்பார் என்று யோசித்தேன். மகாராஷ்டிர ராஜ்யத்திலே, 'சிவசேனை' என்ற பெயரில் அங்குள்ள தென்ஞட்டு மக்களை இம்சைக்கு உட்படுத்துவதாலும், அங்குசிலருக்கு இன வெறி அதிகம் ஏற்பட்டுவிட்டதாலும் அவர்களுக்குப் புத்தி கற்பிக்க கடவுள் இப்பூகம்பத்தை அனுப்பியுள்ளதாகச் சொல்லக்கூடும்.

வட இந்தியாவிலே இப்போது மொழிவெறியைக் கிளப்பி, தென்ஞட்டுமக்களை இம்சைப் படுததுபவர்களுக்கும், இந்த விபத்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

[4ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனிததோமையார் திருநாள்

பண்டத்தரிப்பு, புதன்

மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் புனித தோமையாரின் திருநாள் இம்மாதம் 21-ம் திகதி கொண்டாடப்படவிருக்கிறது. இதற்கு ஆயத்தமாக நவ நாட்கள் நடைபெற்று வருகின்றன. கட்டளைக்குரவர் வண. ரி. ஏ. எக்ஸ். தேவதாசன் ஆராதனைகளை நடாத்திவருகிறார். 21-ம் திகதி திருநாள் பூசையுடனும் சொரூப சுற்றுப்பிரகாரத்துடனும் முடிவடையும்.

## அகதிகளை எம். பி. பார்த்தார்

சுழிபுரம், புதன்

வட்டுக்கோட்டை தொகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வீடுவாசல்களை இழந்து பொது இடங்களில் தஞ்சம் புகுந்துள்ள அகதிகளை வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் சென்று பார்த்தார்.

## சுகாதார நடவடிக்கை

சுழிபுரம், புதன்

தொல்புரம், மூளாய், சுழிபுரம் ஆகியஇடங்களிலுள்ள கிணற்று நீரில் குளோறின் மருந்து கலக்கப்படுகின்றது. இப்பகுதியில் கடமையாற்றும் சுகாதாரப் பரிசோதகர் இவ்விஷயத்தில் அதிக கவனம் செலுத்திவருகின்றார். அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக்காரணமாக தண்ணீர் மூலம் ஏதும் நோய்கள் பரவாமல் இருப்பதற்கே இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது!

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் மாநகர சபை மின்சாரநிலைய சுப்பிரிண்டன்ட் திரு. எம். மகாலிங்கம், மின்நிலைய என்ஜினியர் திரு. பிறே ஆகிய இருவரும் அடுத்த வருடம் ஜனவரிமாதம் தொடக்கம் மட்டக்களப்பு, கண்டி ஆகிய இடங்களுக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளனர்.

ஃ ஃ ஃ

இமையாணன், வியா.

வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரியில் ஆசிரியராகக்கடமையாற்றிய திரு. வி. சண்முகராசா கொழும்புக்கு மாற்றலாகிச்செல்கின்றார். இதையொட்டி கல்லூரியின் சிரேஷ்ட வகுப்பு மாணவர்கள் அவருக்குஒரு தேநீர் விருந்துபசாரம்நடத்தினர்.

## விலை உயருகிறது

இமையாணன், வியா.

இமையாணன் - உடுப்பிட்டிப்பகுதிகளில், வெள்ளம் காரணமாகவும், ரூபாமதிப்புக் குறைக்கப்பட்டது காரணமாகவும் காய்கறி வகைகளும், மீன்வகைகளும் உட்பட உணவுப் பொருள்களின் விலை சொல்லமுடியாத அளவிற்கு விஷம்போல் ஏறியுள்ளது. தீப்பெட்டி உட்பட அநேகமான பொருட்கள் கூடிய பணம் கொடுத்தேனும் பெறமுடியவில்லை. சிய பொருட்களின்விலைபின்வருமாறு:—

அரிசி ஒருகொத்து 1—80 தொடக்கம் 2-00 ரூபா வரையும், ஒரு கோழி முட்டை 35 சதம் தொடக்கம் 50சதம் வரையும், தேங்காய் 50 சதம்.

## காண்டன் . . .

[3-ம் பக்க தொடர்ச்சி)

வத்தினர் வந்தே சண்டையை நிறுத்தியதாகவும்அவர்கள் மேலும் கூறினர்.

ஹுக்கியான் மாகாணத்தில் மா-சே-துங்கின் ஆதரவாளர்களுக்கு ஒரு நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# வாய்க்கால் வெட்டாததால் 2000 பேர் பாதிக்கப்பட்டனர்

கொடிகாமம், புதன்

கொடிகாமத்திலிருந்து எருவன்வரை வாய்க்கால் வெட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காததால், சுமார் 2000 பேர்கள் இங்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டனர் என்று கச்சாய் கிராமசபைத் தலைவர் திரு. சிதம்பரப்பிள்ளை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: 63-ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின்போது, என்ஜினியர் திரு. என். நடேசன், காரியாதிகாரி திரு. என். சிவஞானம் ஆகியோர் வந்து கொடிகாமத்தில் தேங்கி நின்ற வெள்ளத்தைப் பார்வையிட்டு வாய்க்கால்வெட்டவேண்டுமெனத் தெரிவித்தனர்.

இவ்வாய்க்கால் செல்லும் காணிச் சொந்தக்காரர்கள் சுமார் 100 பேர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு, அரசாங்க அதிபருக்கு அனுப்பப்பட்டது. காணிச் சொந்தகாரர்களில் அதிகமானோர், காணிகொடுக்கச் சம்மதிக்கவில்லை. இதனால் இத்திட்டம் நிறைவேறாமல் இருக்கிறது.

அரசாங்கம் கட்டாயமாக இக்காணிகளைச் சுவீகரித்து, வாய்க்கால்வெட்டி, வெள்ள நீர் பாய வழி செய்தால், வருடாவருடம் இப்பகுதி மக்கள் வெள்ளத்தால் பாதிக்க நேரிடாது. ஒவ்வொரு வருடமும், வெள்ள நிவாரணத்திற்கு ஆயிரக் கணக்கான பணம் இங்கு செலவிடப்படுகிறது. இப் பணத்தைக்கொண்டே இந்தவாய்க்காலை வெட்டிவிடலாம்


63-ம் ஆண்டு வாய்க்கால் வெட்ட காணி கொடுக்க மறுத்தவர்களில் பலரும், இம்முறை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, வீட்டை விட்டு வெளியேறியிருக்கின்றனர்.

அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமுன், காணிச் சொந்தக்காரர்கள், தாங்களாகவே காணியைக் கொடுக்க முன்வரும்படி, கிராமசபைத் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## புதிய குடியரசு

நியூயோர்க், டிசெ. 13

புதிய குடியரசான தென் ஈமனை ஐ. நா. பந்தோபஸ்து சபை ஏகமனதாக முடிவு செய்துள்ளது.


இதோ அதன் ஈடிணையற்ற சிறப்பம்சங்கள்! இந்த உன்னத அம்சங்களை ஒப்பிட்டுப் பார்த்து, இன்றே எஸ்-லோனை உங்கள் உபயோகத்துக்குத் தேர்ந்தெடுங்கள்!

1. சிதைவடையாதது 2. இறகுக் கனமுடையது

3. நொடியில் பொருத்தக்கூடியது

நீடித்துழைக்கவென்றே தயாரானது இந்தக் குழாய். கிரமமாக மாற்ற வேண்டியதில்லை. உலோகக் குழாயை விட ஐந்தில் ஒரு பங்கு கனமுள்ளதாகையால் இறகுக் கனமுடையதெனப் புகழ் பெறுவது எஸ்-லோன். அதன் இடப் பரிமாற்றச் செலவு மிகச் சொற்பம். விரைவாயும் இலகுவாயும் இதைப் பொருத்தலாம். பெரிய வேலைக் குழுக்கள் தேவையேயில்லை.

4. எஃகின் உறுதியுடையது

5. அரிப்புக்குள்ளாகாதது 6. நஞ்சேறாதது

அமுக்கம் இந்தக் குழாயை அசைக்கவே முடியாது. எவ்வளவு கடும் உழைப்புக்கும் இது ஈடு கொடுத்து நிற்கும். இதிற் கறள் பிடியாது. இதைத் துப்புரவு செய்ய வேண்டியதில்லை. அரிப்பூட்டும் ரசாயன மருந்துகள் இதைப் பாதிக்க மாட்டா. எஸ்-லோன் குழாய்களில் பாயும் தண்ணீரில் ஒருபோதும் நஞ்சேறாது.

7. கால நிலைப் பாதிப்பற்றது

8. மின் அதிர்ச்சிப் பாதிப்பற்றது

இது, கடும் வெய்யில், மழை, பருவக் காற்றுத்தாக்குதலை எதிர்த்து நிற்பது. எஸ்-லோனின் விசேஷ மின் காப்புப் பண்பு காரணமாக மின்கம்பிக் காப்பு வேலைகளுக்கு அரசாங்க அங்கீகாரம் பெற்ற குழாய் இது.

9. சிக்கனமானது 10. துணை உறுப்புகள் கொண்டது

பிற தேவைகளுக்குப் பணத்தை மீதப்படுத்தித்தரும் நீண்ட காலப் பெறுமதியை வழங்குகிறது இது. எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் 300-க்கு மேற்பட்ட விரிந்தளவான துணை உறுப்புகள் கொண்டது.

S-lon

எஸ்-லோன் — குழாய்த் தொழிலில் அதி சிறந்த இலவச தொழில் நுட்ப ஆலோசனையினதும் சேவையினதும் ஆதாரம் கொண்டது.

மகாராஜா ஓர்கனைசேஷன் லிமிட்டெட்

the maharaja organisation

MO/P 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1968-ம் வருடத்து மங்களகரமான

# மெய்கண்டான் திருக்குறட் கலண்டர், டயறிகளின் விலை விபரங்கள்

## கலண்டர்கள்
''மெய்கண்டான்''

| | | ரூ. ச |
|---|---|---|
| 1. | திருக்குறட் கலண்டர் NO 1 ஸ்பெஷல் | 2 40 |
| 2. | திருக்குறட் கலண்டர் NO 1 சிவப்பு | 2 25 |
| 3. | திருக்குறட் கலண்டர் NO 1 B கறுப்பு | 2 15 |
| 4. | சிங்கள கலண்டர் NO 1 கலண்டர் அளவுள்ளது | 2 15 |
| 5. | நன்மொழிக் கலண்டர் NO 2 | 1 40 |
| 6. | இரு கலர் இங்கிலீஷ் கலண்டர் போஸ்ரர் பேப்பர் | 3 00 |
| 7. | ஒரு தேதி கலண்டர் NO 3 | 85 |
| 8. | மாதக் கலண்டர் பஞ்சாங்கக் கலண்டர் | 85 |
| 9. | ரூேல் கலண்டர் இனும் கொடுக்கத் தகுந்தது | 30 |
| 10 | ரேபிள் கலண்டர் பிளாஸ்ரிக் ஸ்ராண்டுடன் | 5 50 |
| | ,, ,, றீபில் (Refills) மட்டும் | 4 00 |
| 11. | A ஆபீஸ் கலண்டர் (5'' X 7¼'') [அழகிய வெள்ளை பாங்க் காகிதத்தில் அச்சிடப்பட்டது] | 5 75 |
| 11. | B ஆபீஸ் கலண்டர் (5'' X 7¼'' [சாத ரண வெள்ளை நியூஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது] | 4 75 |
| 12. | தகரப் படம் அழகிய பலமாதிரிகள் | 2 75 |

## பிளாஸ்ரிக் டயறிகள்
''மெய்கண்டான்''

| | | |
|---|---|---|
| 13. | NO 1 பிளாஸ்ரிக் தமிழ் டயறி பிளாஸ்ரிக் கவருடன் | 2 75 |
| 14. | NO 2 பிளாஸ்ரிக் திருக்குறள் டயறி | 2 20 |
| 15. | NO 2 பிளாஸ்ரிக் திருக்குறள், சினிமா டயறி | 2 75 |
| 16. | NO 3 பிளாஸ்ரிக் டெஸ்க் டயறி ,, | 3 60 |
| 17. | NO 4 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி ,, | 2 20 |
| 18. | NO 5 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி ,, | 1 75 |
| 19. | NO 6 பிளாஸரிக் பிஸனஸ் டயறி 'A' பக்கம் 1 நாள் | 3 85 |
| 20. | NO 7 ,, ,, ,, 'B' பக்கம் 2 நாள் | 3 30 |
| 21. | NO 8 அலுவலக (Official) டயறி பிளாஸ்ரிக் கவர் | 3 55 |
| 22. | ஜெம் பிளாஸரிக் டயறி | 1 85 |
| 23. | புறெபெஷனல் பாக்கெட் டயறி (Appointments) | 3 30 |

## பேர்ஸ் டயறிகள்
''மெய்கண்டான்''

| | | |
|---|---|---|
| 24. | NO 1 பேர்ஸ தமிழ் டயறி பேர்ஸ் சகிதம் with Purse | 3 70 |
| 25. | NO 2 பேர்ஸ திருக்குறள் டயறி ,, ,, | 3 15 |
| 26. | NO 4 பேர்ஸ இங்கிலிஷ் டயறி ,, ,, | 3 15 |
| 27. | NO 5 பேர்ஸ இங்கிலிஷ் டயறி ,, ,, | 2 75 |
| 28. | NO 6 பேர்ஸ் பிஸனஸ 'A' டயறி பக்கம் 1 நாள் | 4 95 |
| 29. | NO 7 ,, ,, 'B' டயறி பக்கம் 2 நாள் | 4 40 |
| 30. | NO 8 அலுவலக (Official) டயறி பேர்ஸ் சகிதம் | 5 25 |
| 31. | ஜெம் பேர்ஸ டயறி | 2 75 |
| 32. | புறெபெஷனல் பாக்கெப் பேர்ஸ் டயறி | 4 15 |
| 33. | வலற் டயறி Wallet Diary - மிகச் சிறந்தது | 6 50 |
| 34. | புறெபெஷனல் பேர்ஸ (Appointments) டயறி 7¼'' X 9¾'' | 9 00 |
| 35. | பேர்ஸ நியமன (Appointments) டயறி | 8 50 |

## தங்கநிற (Rolled Gold) பூட்டுடன் கூடிய பேர்ஸ் டயறிகள்
''மெய்கண்டான்''

| | | | |
|---|---|---|---|
| 36. | NO 2 திருக்குறள் டயறி | பூட்டுடன் பேர்ஸ் | 4 25 |
| 37. | NO 2 திருக்குறள், சினிமா டயறி | பூட்டுடன் பேர்ஸ் | 4 75 |
| 38. | NO 4 இங்கிலிஷ் டயறி | பூட்டுடன் பேர்ஸ் | 4 25 |
| 39. | NO 5 இங்கிலிஷ் டயறி | பூட்டுடன் பேர்ஸ் | 3 75 |
| 40. | ஜெம் டயறி | பூட்டுடன் பேர்ஸ் | 3 85 |

## பெரிய டயறிகள்
(டாக்டர், வக்கீல், பெரிய வர்த்தகர்களுக்கு உகந்தது)
''மெய்கண்டான்''

| | | |
|---|---|---|
| 41. | நியமன (Appointments) டயறி பக்கம் 1 நாள் (கலிக்கோ) | 4 70 |
| 42. | பிளாஸரிக் நியமன (Appointments) டயறி | 5 50 |
| 43. | பிளாஸரிக் டாக்டர் (Appointments) டயறி | 6 00 |
| 44. | புறெபெஷனல் பிளாஸரிக் (Appointments) டயறி 7¼'' X 9¾'' | 7 00 |
| 45 | புல்ஸகாப் டயறி (கலிக்கோ) | 15 00 |

## சிங்கள டயறிகள்
''மெய்கண்டான்''

| | | |
|---|---|---|
| 46. | சிங்கள பாக்கெட் டயறி (கலிக்கோ பைண்ட்) | 1 65 |
| 47. | பிளாஸரிக் சிங்கள பாக்கெட் டயறி | 2 20 |
| 48. | பேர்ஸ சிங்கள டயறி | 3 30 |
| 49. | சிங்கள பஞ்சாங்க 'A' டயறி (Plastic) பக்கம் 1 நாள் | 3 85 |
| 50. | சிங்கள பஞ்சாங்க 'B' டயறி (Plastic) பக்கம் 2 நாள் | 3 30 |

## சாதாரண டயறிகள் (கலிக்கோ பைண்ட்)
''மெய்கண்டான்''

| | | |
|---|---|---|
| 51. | NO 1 தமிழ் டயறி (கலிக்கோ பைண்ட்) | 2 15 |
| 52. | NO 2 திருக்குறள் டயறி (கலிக்கோ பைண்ட்) | 1 65 |
| 53. | NO 2 சினிமா டயறி | 2 15 |
| 54. | NO 3 டெஸக் டயறி (கலிக்கோ பைண்ட்) | 2 75 |
| 55. | NO 4 இங்கிலிஷ் டயறி (கலிக்கோ பைண்ட்) | 1 65 |
| 56. | NO 5 இங்கிலிஷ் டயறி | 1 15 |
| 57. | NO 6 பிஸனஸ 'A' டயறி (பக்கம் 1 நாள், கலிக்கோ பைண்ட்) | [illegible] |
| 58. | NO 7 பிஸனஸ 'B' டயறி (பக்கம் 1 நாள், கலிக்கோ பைண்ட்) | 2 50 |


# "தந்தையின் நிலைக்கு நானே காரணம்"

## இப்படிக் கூறியவர் தற்கொலை

சாவகச்சேரி, புதன்

''தந்தை றிமாண்டில் இருப்பதற்குத் தானே காரணமெனத் தினமும் தாயிடம் கூறிவந்த இளைஞர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். மகனின் ஈமக்கிரியைகளை முடிக்க றிமாண்டில் இருந்து பிஸ்கால் பாதுகாப்பில் அரைமணி நேர லீவில் வந்த தந்தை வீட்டிலேயே மகனின் இறுதிக் கடமையை முடித்து மீண்டும் மறியற்சாலைக்குத் திரும்பினார்''. இச் சம்பவம் சாவகச்சேரியை அடுத்துள்ள பாலாவி என்றஇடத்தில் நடைபெற்றது.

வைரவி கந்தையாவின் 19 வயது மகன் அழகரத்தினம் என்பவரே இம் மரணத்துக்குள்ளானவராவார் இம் மரணம் குறித்து ஸ்தலத்தில் திடீர் மரண விசாரணைஅதிகாரி திரு.கே. கதிர்காமசேகரர் விசாரணை நடத்தினார்.

இறந்த வாலிபரின் தாய் கனகம்மா சாட்சியமளிக்கையில், 'எனது கணவர் கொலை வழக்கொன்றில் எதிரியாவார். அவ் வழக்கு மாஜிஸ்திரேட் கோர்ட் விசாரணை முடிவில் சுப்ரீம் கோர்ட்டிற்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது. கணவர் றிமாண்டில் இருக்கின்றார். இறந்த எனது மகன் இக் கொலைவழக்கு காலத்திலும் பின்பும் 'என்னாலேயே என் தந்தை றிமாண்டில் இருக்கின்றார். என்னாலேயே இக் கஷ்டம் வந்தது' எனத் தினமும் கூறிவந்தார். சம்பவதினம் மாலை 3-30 மணிக்கு தேநீர் தயாரிக்கும்படி மகன் என்னிடம் கூறினார். நான் குசினிக்குள் சென்று தேநீர் தயாரித்து வெளியில் வந்தபோது மகனைக் காணவில்லை. வீட்டைச் சுற்றித் தேடியபோது கோடியிலுள்ள சின்ன மாமரம் ஒன்றில் தொங்கிக்கொண்டிருந்தார். நான் காலில் பிடித்துத் தூக்கித் தாங்கியபடி குளறினேன். அயலவர் வந்து கயிற்றை அறுத்துவிட்டனர்.

சாவகச்சேரி சட்டவைத்திய அதிகாரி பிரேத பரிசோதனை நடாத்தியதன் பின் திடீர் மரணவிசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

இறந்தவரின் தந்தையார் கந்தையா றிமாண்டிலிருந்து அரைமணி நேர லீவில் வீட்டிற்குவந்து ஈமக்கிரியைகளை முடித்து பாதுகாப்பில் மறியல்சாலைக்குத் திரும்பினார்.

## விற்பனவுஇலாகா வென்றது

யாழ்ப்பாணம், புதன்

அரசாங்க ஊழியர்களுக்கிடையே நடாத்தப்படும் கிரிக்கெட் போட்டியில் 'எப்' பிரிவுப் போட்டியில் விற்பனவு இலாகாக் கோஷ்டியினரும் வருமான வரி இலாகா கோஷ்டியினருக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் விற்பனவு இலாகா வெற்றி பெற்றது.

வருமான வரி இலாகா தனது முதல் இன்னின்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 230 ஓட்டங்களை பெற்றது. விற்பனவு இலாகா தனது முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட்டுகளை இழந்து 231 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜோசப் 88 ஓட்டங்களையும் வைச்சிரவேல் 62 ஓட்டங்களையும் பெற்றது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

**வியாழன் 14-12-67**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் & 61 மீற்றர் காலை 6-25 திருவெம்பாவை — வெள்ளவத்தை மாணிக்கவிநாயகர் கோவிலில் இருந்து அஞ்சல், 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 8-00 நிலையஒலிப் பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர் பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 49 மீற்றர் மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாளையசந்ததி, 5-45 பாங்கு

இரவு 6-15 நாடோடிப் பாடல்கள், 6-45 கிராம சஞ்சிகை, 7-15 பாவளம், 7-30 முத்திநெறி—சைவ சஞ்சிகை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு—எம். வைரமுத்து, 9-45 பாட்டு—ஆர். நடராசா.

## நிவாரணம்

ஊர்காவற்றுறை, செவ்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவச உணவுப் பொருள்களை வழங்குவதில் தீவுப் பகுதி கிராம சேவகர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சரவணைக் கிராம சேவையாளர் திரு. தளையசிங்கம் நேற்று முன்தினம் தமது காரியாலயத்தில் வைத்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாவு, சீனி, தேங்காய் முதலிய பொருட்களை விநியோகம் செய்தார்.


மாவிட்டபுரம் குருக்கள் கூறுகிறார்கள்:
இறைவன் திருமேனியை
**சந்தனக்காப்பிட்டு**
அலங்கரிக்கவும் பின் பிரசாதமாக
உபயோகிக்கவும் உகந்தது
உடன் அரைத்தெடுத்த சந்தனமாகும்
அத்தகைய சுத்தமான
**பச்சை சந்தனம்**
யாழ்ப்பாணம் 73, மின்சார நிலைய வீதியிலுள்ள
**சுந்தரம் பிறதர்ஸ்**
ஸ்தாபனத்தில்
எப்போதும் வாங்கக்கூடியதாக ஒழுங்குசெய்திருப்பது
மிகவும் போற்றுதற்குரியதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 41 வலைகளைக் காணவில்லையாம்

நெடுந்தீவு, செவ்வாய்

யாழ்ப்பாணக் கரையூரைச்சேர்ந்த அகஸ்ரீன் மகேஸ் என்பவருக்குச் சொந்தமான 41 வலைகள் கடந்த 7-ம் திகதி இரவு புங்குடுதீவிற்கும் நெடுந்தீவிற்கும் இடையே ஆழ்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருக்கையில் ஏற்பட்ட கடும் காற்ருலும் கடல் கொந்தளிப்பாலும் அள்ளுண்டு போய்விட்டனவாம். படகிலிருந்தவர்கள் படகு ஆபத்தில் சிக்கியதும் வலைகளை அறுத்துவிட்டு யாழ்ப்பாணம் நோக்கி படகை ஓட்டி தங்கள் உயிரை காப்பாற்றிக் கொண்டார்களாம் மீண்டும் கடல் கொந்தளிப்பு குறைந்ததும் மறுநாள் வெள்ளிக்கிழமை வலைகளைத் தேடிப் புறப்பட்ட இவர்கள் இன்றுவரை அவற்றைக் காணுது பெருங் கவலைக்குள்ளாகியுள்ளார்கள். இவற்றின் பெறுமதி 12,000 ரூபாவரையில் இருக்குமாம். இவ்வலைகளில் 27 வலைகள் கலர் வலைகளும், மிகுதி வெள்ளை வலைகளுமாம்.

இதுவிஷயமாக நெடுந்தீவுக் காரியாதிகாரிக்கு அறிவித்திருப்பதாகவும் தாங்கள் தொடர்ந்து தொழில் செய்ய முடியாதிருப்பதாகவும் வலைகளை மீண்டும் புதிதாக ஆக்கிக்கொள்ள நிதியுதவியின்றிக் கஷ்டம் அடைந்துள்ளதாகவும் இவர்கள் கூறிகிருர்கள்.

# 500தொன் கிழங்குவிதைகள் மே. ஜெர்மனி வழங்கியது

கொழும்பு, செவ்வாய்

மேற்கு ஜேர்மனி இலங்கைக்கு 500 தொன் உருளைக்கிளங்கு விதைகள் அன்பளிப்புச் செய்துள்ளது.

இதனை இன்று மேற்குயேர்மன் ஸ்தானிகர் உணவு அமைச்சர் திரு. எம். டி.

பண்டாவிடம் அன்பளிப்புச் செய்தார்.

இந்த உருளைக்கிளங்கு விதைகள் யாழ்ப்பாணத்துக்கும்அனுப்பப்படுமெனத் தெரியவருகிறது. யாழ்ப்பாணத்தில் 300 ஏக்கர் நிலத்தில் உருளைக்கிழங்கு பயிரிடப்படுகிறது.

## மீண்டும் மழை பெய்கிறது

கொடிகாமம், புதன்

இரண்டு தினங்கள் கடுமையாக எறித்த வெய்யிலுக்குப் பின்னர் நேற்றுக் காலை கொடிகாமப் பகுதியில் மீண்டும் மழைபெய்ய ஆரம்பித்துள்ளது.

மழைபெய்ததன் காரணமாக வெள்ளம் படிந்திருந்த சில இடங்களில், மீண்டும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. கொடிகாமத்திற்கும், மிரிசுவிலுக்குமிடையில் பிரதான வீதியில் நேற்று சுமார் 1 அடிக்கு வெள்ளம் நின்றது.

திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும். ஆஸ்பத்திரியிலும், குட்செற்றிலும் வெள்ள அகதிகள் தொடர்ந்து வசித்து வருகின்றனர். கிராமசபை உறுப்பினர் தி. ஆ. கனகரத்தினம் இந்த அகதிகளுக்கு இவ்வாரமும் இலவசமா வழங்குவதற்கு முயற்சிஎடுத்து வருகின்ருர்.

கிராம சேவகர் திரு. ஏ. குலநாயகம், வீடிழந்தவர்களின் புள்ளிவிபரங்களை சேகரிக்கும் வேலைகளை நேற்று ஆரம்பித்தார். மீசாலை வடக்குப்பகுதியில் வீடிழந்தவர்களின் புள்ளிவிபரங்களை கிரர்ம சேவகர் திரு. சி. அம்பலவாணபிள்ளை சேகரித்து வருகிருர்.

## நூற்றுக்கணக்கானோர் வாங்கினர்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள விற்பனைஇலாகாநிலையத்தில் நேற்றும் ஒருகொத்து அரிசி ரூ. 1-05 சதமாக, நூற்றுக்கணக்கானோர் 'கியூ' வில் நின்று வாங்கிச் சென்றனர்.

அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கியூவில் காணப்பட்டனர். பஸ்ஸிற்காக' கியூ வில்நீண்ட நேரம் நின்றவர்களில் சிலரும் அரிசிவாங்குவதற்காக 'கியூ' வில் போய் நின்றனர்.

மற்றக்கடைகளில் 1 கொத்து அரிசி (கல், உமி, மண் உட்பட) 2 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது. நல்லரக அரிசி கொத்து ரூ. 2-20 சதமாக விற்பனை செய்யப்பட்டது.

சுத்தமான ஊர் அரிசியை யாழ்ப்பாணத்திலுள்ள எந்தக்கடையிலும் பெறமுடியவில்லையென ஒரு பாவனையாளர் தெரிவித்தார்.

தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான சில மில்களில் அரிசி 1-50 சதவீதம் விற்கப்படுவதாகவும் அறியப்படுகின்றது.

## நெல் உற்பத்தி போட்டி

கொழும்பு, செவ்.

இலங்கை பூராவுப் நெல் உற்பத்திப்போட்டி ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இப்போட்டியில் காணிச் சொந்தக்காரரும் குத்தகைக்காணியில் விவசாயம் செய்பவர்களும் பங்கு கொள்ளலாம். ரூ. 750 முதல் பரிசாகவும் இரண்டாவது பரிசாக 300 ரூபாவும் ரூ. 100 மூன்ருவது பரிசாகவும் வழங்கப்படவிருக்கிறது.

முதல் பரிசைப் பெறுபவருக்கு தங்கப்பதக்கம் வழங்கப்படவிருக்கிறது. மூன்று பரிசுகளைத் தவிர ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும். இப்போட்டி விபரங்களை உணவு உற்பத்தி மேற்பார்வையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சமஸ்கிருதத்தில் சிலப்பதிகாரம்

சென்னை, டிச. 12

அகில உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் சிலப்பதிகாரத்தின் சமஸ்கிருத மொழிபெயர்ப்பு சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. திரு. தேசிகன் இதனை மொழிபெயர்த்துள்ளார்.

# சம்பள உயர்வு

கொழும்பு, செவ்.

தனியார்துறை ஊழியருக்கும், தோட்டத் தொழிலாளருக்கும் டிசம்பர் மாதம் முதல் சம்பளம் அதிகரிக்க இருக்கிறது. இதன்மூலம் சுமார் 10 லட்சம் பேர் பயனடைவர்.

இதற்கான அவசரகால உத்தரவு நேற்றிரவு பிறப்பிக்கப்பட்டது. இந்தச் சம்பள உயர்வு தற்காலிக உயர்வுதானென்றும் நிரந்தரமான ஒரு சம்பளஉயர்வு பின்பு அறிவிக்கப்படுமென்றும் தொழில் மந்திரி அலஹாஜ் எம்.எச். முகமது கூறினர்.

வர்த்தக ஊழியருக்கு 10 ரூபாவும், தோட்டத் தொழிலாளருக்கு ரூ. 3-75 சதமும் உயர்த்தப்படும்.

## இரு மந்திரிகள் கைது

புதுடில்லி, டிச. 12

உத்தர் பிரதேஷ் ராஜ்யத்தைச் சேர்ந்த இரு அமைச்சர்கள் இன்று கைதுசெய்யப்பட்டார்கள்.

மொழி மசோதாவை எதிர்த்து சட்டத்தை மீறி ஆர்ப்பாட்டம் செய்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

## யாழ்ப்பாணம் எம்.பி. பார்த்தார்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் எம்.பி. திரு ஜி. ஜி. பொன்னம்பலம் நேற்றுக்காலை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவை சந்தித்து வெள்ள அகதிகளின்நிலைமைபற்றி ஆராய்ந்தார்.

யாழ்ப்பாண எம். பி. அரசாங்க அதிபர் காரியாதிகாரி ஆகியோர்களுடன் நேற்றுக்காலை யாழ்ப்பாணப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டார். பாடசாலையில் தஞ்சமடைந்துள்ள நூற்றுக்கணக்கான குடும்பங்களை சந்தித்த யாழ்ப்பாண எம். பி. அவர்களுக்கு ஆறுதல் கூறினர்.

வெள்ள நிவாரண வேலைகளை விரைவில் முடிக்கும்படியும் பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ள குடும்பங்கள் திரும்பவும் வீடுகள் கட்டுவதற்கு வசதியாக கூடிய கெதியில் பணஉதவியைச்செய்யுமாறும் யாழ்ப்பாண எம். பி. அரசாங்க அதிபரை கேட்டுக்கொண்டார், நிவாரண வேலைகள் திருப்தியளிப்பதாகவும் திரு பொன்னம்பலம் தெரிவித்தார்.

## வெள்ள அரிப்பு

யாழ்ப்பாணம், புதன்

கடந்த சில தினங்களாக விடாமற் பெய்யும் மழை காரணமாக தெல்லிப்பழையில் அம்பனைப்பகுதியில் வெள்ளம்பெருகி இடத்தை அரித்து வருவதால் மக்கள் கவலையடைந்துள்ளனர்.

மூட்டிமோதிய வெள்ளம் வீதியை மேவிப்பாய்ந்து கொண்டிருக்கிறது. இது பற்றி குறிப்பிட்ட பகுதி தமிழரசுக்கட்சிச் செயலாளர் சுந்தரம் காங்கேசன் துறை எம். பி. திரு. செல்வநாயகத்துக்கு அறிவித்திருக்கிருர். (நி)

பூநகரிப் பகுதிக்கு

# தபால், போக்குவரத்துஇல்லை; மக்கள் பட்டினியால் அவதி

பூநகரி, புதன்

பூநகரியின் மத்திய பகுதியில் வெள்ளத்தால் சேதம் இல்லை. ஆனுல் பூநகரியின் கரையோரப்பகுதி வெள்ளத்தால் வேளாண்மை சேதமடைந்திருக்கின்றது. பூநகரி — பல்லவராயன்கட்டு, குமிழமுனை, வேரவில், பொன்னுவெளி போன்றபகுதிகளில் வெள்ளத்தாலும், புயலாலும்மக்கள் பாதிக்கப்பட்டு வீடிழந்தோராய் பாடசாலைகளில் தஞ்சமடைந்திருக்கிருர்கள்.

பூநகரி — மன்னுர் வீதியிலுள்ள மண்டக்கிளாறு மிகவேகமாகப் பாய்வதினுலும். ரேட்டுக்களை வெள்ளம் அரித்ததினுலும், மதவுகள் உடைந்ததினுலும் பல்லவராயன்கட்டுப் பகுதிக்கு ஒரு வாகனமும் செல்லமுடியாமலிருக்கின்றது. இதன் காரணத்தால் சென்றவாரம்கூப்பன் அரிசி செல்லவில்லை. அங்குள்ள மக்கள் பசியால் வாடுவதாகவும் அவர்களுக்கு இன்று உணவு செல்ல இருப்பதாகவும் தெரிகின்றது.

பூநகரி—பரந்தன் வீதியிலுள்ள 'குடமிறிட்டிஆறு' ஐந்து அடி உயரத் தண்ணீர் பாய்ந்துகொண்டிருக்கிறது. குடமிறிட்டி ஆற்றில் ஒரு 'லொறி' புரண்டு கிடக்கின்றது. பூநகரி — அன்னதேவன்மையிலுள்ள ஒரு மதகு உடைந்திருப்பதாலும், ரேட்டுகளை வெள்ளம் அரித்ததினுலும் இ. போ. ச. பஸ்சேவை நடைபெறவில்லை, பஸ் சேவை நடைபெருமையினுல் தபால் சேவையும் நடைபெறவில்லை. யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளுக்குச் செல்ல வேண்டியவர்கள் கால்நடையாகச் செல்கின்றனர். பூநகரியின் கடற்கரையோரத்தில் முன்னர் அணைகட்டியமையால் நாட்டிற்குள் கடல்தண்ணீர் புகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கொள்ளைலாபம் அடிக்கும் வர்த்தகரின் பெயர் வானெலியில் ஒலிபரப்பப்படும்

யாழ்ப்பாணம், புதன்

கட்டுப்பாட்டு விலையின் கீழ்உள்ள பொருட்கள் மீது கொள்ளை லாபமடிக்கும் வர்த்தகர்களின் பெயர்களை நேற்றுஅரசாங்கம்வானெலி மூலம் வெளியிட்டது.

நாடெங்கும், பொலிஸாரினுலும், விலைக்கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்களாலும், கைதுசெய்யப்பட்ட, வர்த்தகர்களின் பெயர், விலாசங்கள் தொடர்ந்து வானெலி மூலம் வெளியிடப்படும்.

கொள்ளை லாபமடிக்கும் வர்த்தகர்களின் விபரங்களை அனுப்புமாறு, அரசாங்க அதிபர்களையும், பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களையும் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுஸ்தாபனம் கோரியுள்ளது.

இது கொள்ளை லாபமடிக்கும் வர்த்தகர்களுக்கு ஒரு படிப்பினையாக இருக்கும் எனக்கூறப்படுகிறது.

## வெள்ள நிவாரணம்

நெடுந்தீவு, செவ்வாய்

நெடுந்தீவுக் காரியாதிகாரியும் கிராமசேவகர்களும் எடுத்துக்கொண்ட துரித நடவடிக்கை காரணமாக வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உப உணவுகளான மாவு, சீனி, பருப்பு, மிளகாய் ஆகிய பொருட்கள் ஒவ்வொரு கிராமசேவகராலும் இலவசமாக வழங்கப்படவிருக்கிறது.

## இலங்கையில்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

திரு. என்.ஜே, சொக்ஸி கியூ. சி. திரு. எஸ். சோமசுந்தரம், வண ஜேம்ஸ் மேதர் ஆகியோரும் இக் கூட்டத்தில் பேசினர்கள். பல சமூகத்தவர்களையும் கொண்ட இக் கூட்டத்தில் அரசாங்க எதிர்க்கட்சி அங்கத்தவர்களையும் கொண்டாட்டத்திற்கு அழைப்பதென தீர்மானிக்கப்பட்டது.

செனட்சபைத் தலைவர் திரு. ஏ. இரத்தினயக்கா ஏகமனதாக இக் கமிட்டி தலைவராக தெரிவுசெய்யப்பட்டார்.

## வடமராட்சியிலும் இலவச விநியோகம்

புலோலி, செவ்வாய்

கடந்த சிலதினங்களாக இடைவிடாது பெய்தமழையினுலும், வெள்ளத்தினுலும் பாதிக்கப்பட்ட வடமராட்சி மக்களுக்கு வடமராட்சிக்காரியாதிகாரி இலவசமாக, மா, சீனி, மிளகாய், உப்பு போன்ற பொருட்களை வழங்க ஏற்பாடு செய்தார்.

## இலவச விதைநெல் வழங்க முயற்சி

மல்லாவி, புதன்

தொடர்ந்து பெய்த பெருமழையினுல் பாதிக்கப்பட்ட இடங்களுக்குக் கிளிநொச்சித் தொகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் சென்று நிலைமைகளை நேரடியாகப் பார்வையிட்டார். துணுக்காய்ப் பிரிவுக் காரியாதிகாரி திரு. மு. தம்பிமுத்துஅகதிகளின் நிலைமை பற்றியும் நிவாரண உதவிகள் பற்றியும் விளக்கிக் கூறினர். அகதிகளுக்கு உடன் நிவாரணமாக உணவுப் பொருட்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்படுகின்றன.

மழையினுல் சேதமடைந்த வயல்களைத் திரும்பவும் விதைப்பதற்கு இலவச விதைநெல் கொடுப்பதற்கேற்ற ஒழுங்குகளை யாற் மாவட்ட காணி அதிபர் கிளிநொச்சி எம்.பி. துணுக்காய் காரியாதிகாரி ஆகியோர் கவனிக்கிருர்கள்.

காற்றினுல் சேதமடைந்த வீட்டுத் தோட்டப் பயிர்களின் மதிப்பீடுகளைக் குடியேற்றத் திட்ட மேற்பார்வையாளர்களும் கிராம சேவையாளர்களும் கவனிக்கின்ருர்கள்.

## சொற் பொழிவு

கொழும்பு, புதன்

இலங்கையிலுள்ள இஸ்ரேலிய தூதர் திரு. சஸ் பொராஸ் 'இஸ்ரேலின் கல்வி' எனும் பொருளில் வரும் சனிக்கிழமை மாலை 6 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் சொற்பொழிவு நிகழ்த்தவிருக்கிருர். தமிழரின் கல்வி பொதுநலச் சங்கத் தலைவர் திரு. ச. சோமசுந்தரம் தலைமைதாங்குவார். தமிழரின் கல்வி பொது நலச்சங்கம் இதற்கான ஒழுங்குகள் செய்துள்ளது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் [illegible] டிசம்பர்மாதம் 14-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org